Regd. No. M. 4900. 16-பக்கங்கள். தனிப்பிரதி விலை 0-2-0.

# குடி அரசு

ESTD. 1924

வருட சந்தா உள்நாடு ரூ. 7-0-0. வெளிநாடு ரூ. 9-0-0. D. S. Mani

மாலை 21 ஈரோடு 3-7-1948 சனிக்கிழமை மலர் 43.

## கூளத்தின் கோலம்!

★

மேலும் மேலும் அடக்கு முறையாம்
வெள்ளம் வருவதேன்? — அது
சீல்மார் திராவிடர் கழகம் நன்றாய்
செழிக்கச் செய்ய வே.

இராவண காவியம் பறிமுதல் செய்து
சர்க்கார் சென்றதேன்? — பல
இராவணன் போன்ற வீரர்கள் நாட்டில்
இன்றே தோன்றிட வே.

விட்டில் பூச்சி விளக்கில் வந்து
விழுந்திடத் துடிப்பதேன்? — அதற்கு
கெட்டகாலம் நெருங்க நெருங்க
கெடுமதி தோன்றிடு மே!

காலமெல்லாமிவர் கொடுமை புரிந்து
காண்பது தானென்ன? — இந்தக்
கோல மெல்லாம்கலைந் தாயின்பின்பொரு
கூளத்துக் கொப்பா வார்.

"அதிவீரபாண்டியன்"

# பரீட்சைத் திட்டம் பட்டொழிக!

★

வண்டியிலே சிக்கி உயிர் நீத்தான் வரதராசன். ரெயிலிலே சிக்கி மாண்டான் மஹாலிங்கம். கடலிலே விழுந்திறந்தான் கனகசபாபதி. நஞ்சுண்டு நலிவுற்று நைந்தான் நமசிவாயம். கழுத்திலே சுருக்கிட்டுக் காலனுக்கிரையானாள் கயற்கண்ணி. ஆம்! கலாசாலைக்குக் கல்வி கற்கச் சென்ற மாணவ மாணவிகளின் முடிவு இது! பரீட்சை யென்ற அந்தப் பாழுந்திட்டத்தால் விளைந்த, விளைகின்ற படு கொலை இது.

பரீட்சை யென்ற அக்கொடிய திட்டத்தின் பொருளற்ற தன்மையைத்தான் சிறிது பார்ப்போமே. பகுத்தறியும் பண்பிலாத பாசுராமனும் பரீட்சையில் பாஸ் பண்ணுகிறான் உருப்போட்டு. வசதிகள் பல உள்ளதாலும், படிக்கும் சூழ்நிலை இருப்பதாலும் பாஸ் பண்ணுகிறான் பத்மநாபன். எண்ணையிலாததால் விளக்கெரியாத வீட்டிலுள்ள வீரன் எங்கே படிப்பது? வறுமையின் பல தொல்லைகள் பிடித்துப் பிய்க்கும் வடிவேல் எவ்வாறு படிப்பான்? உணவிலாது வாடிவதங்கும் உமாபதி எங்கே படித்துப் பாஸ் பண்ணுவது?

'சரி, வசதிகள் சிலருக்கும், அவதிகள் பலருக்கும் இருக்கும் இன்றையப் பொருளாதார நிலையிலே நீ சொல்வது உண்மைதான். எல்லோர்க்கும் எல்லாம் என்றிருப்பதான பொதுவுடைமைப் புதுச் சமுதாயத்திலே பரீட்சையிருந்தாலென்ன?'', என்று கேட்கின்றீர்களா. அந்தச் சமுதாயத்திலும் பரீட்சை அவசியமில்லை -என்றுதான் யான் கூற விரும்புகிறேன்.

ஆராய்ந்து ஆராய்ந்துணரவேண்டும் என்ற அவா, தோண்டித் தோண்டித் துருவித்துருவித் தெரிந்து கொள்ளவேண்டும் என்ற ஆசை, கடல்கடந்தாகிலும் கல்வி கற்கவேண்டும் என்ற வேட்கை மனித இனத்தின் சிறந்ததோர் இயற்கைப்பண்பு. இந்த வேட்கை,. அறிவுத்தாகம், கல்விப்பசி மனிதனின் உள்ளத்தினுள்ளே இருந்தெழும் ஓர் அடக்க முடியாத, அணைக்க முடியாத துடிப்பு—தூண்டுதல். ஆதலினால்தானன்றோ மனித இனம் தோன்றுவதற்குப் பல்லாயிரமாண்டுகட்கு முன்னரே தோன்றிய பூனையும், புலியும், நாயும், நரியும், மாவும், மாடும் அன்று எவ்வாறு வாழ்ந்தனவோ அவ்வாறே இன்றும் வாழவும், பிறகு தோன்றிய மனிதன் கல்லளையை விட்டு எழுபத்திரண்டடுக்கு மாளிகையில் உலாவுகிறான். நடந்து ஓடிக் காலோய்ந்ததை விடுத்து மணிக்கு அறுநூறு மைல் வேகத்தில் ஆகாய வீதியில் பறந்து செல்கிறான். கல்லும், மரமும் தன்னினும் வலியனஎன்று கருதி அவைகளைத் தொழுத அவன், மலைகளைப் பொடியாக்கி மண்தரைக்குச் சரி நிகராகச் செய்யவல்ல மகாற்புத (அணுக்குண்டுகள்) குண்டுகள் செய்கிறான். வாந்தி பேதியும்,நச்சுப்பிளேக்கும், கொடிய பேரம்மையும் வந்தால் காளியின், கூளியின், மாரியம்மனின் சீற்றமெனக்கருதித் தங்களிலேயே பலரைப் பலிகொடுத்த பின்னரும், ஆயிரக்கணக்கில், லட்சக்கணக்கில் மாண்டு வந்த மனித இனம் அறிவைப் பின் தொடர்ந்ததால் இன்று அந்தக்கொடும் நோய்களெல்லாம் சிறு சிறு ஊசிகளுக்கு அடங்கி விட்டன. இவ்வளவு தூரம் அறிவு வளர்ந்ததெல்லாம் பரீட்சைகளாலா? இல்லை. இல்லை. மனிதனின் அறியவேண்டும் என்ற தீராத அவாக்கொண்ட அந்தப் பளுப்பு நிறப் பொருளினால்—மூளையினால்.

17, 18ம் நூற்றாண்டுகளில் உடலைக் கிழித்தறுத்துப் பிரித்துணர வேண்டும் என்ற வேட்கை கொண்ட விஞ்ஞானிகள், கொலைஞர்களுக்குப் பணங் கொடுத்து, கொலை செய்தாகிலும் மக்களின் பிணங்களைக் கொணரச் செய்து கற்றனராம்! அவர்கள் செய்தது தீமைதான். தவறுதான். ஆனால் எவ்வாறாகிலும்கற்கவேண்டும்என்பது மனிதனின் அடிப்படைப் பண்பு என்பதைத்தான்.

ரோம் நாட்டுப் பெரும் பேச்சாளனான சிசரோ கூறுகிறான், ''மனமேம்பாடுகளிலே அறிவுக்காகவே அறிவைத் தொடருவதே முதன்மையானது' என்று. வாட்டி வதைக்கும் வறுமைக்கிடையேயும் பாட்டிசைத்தனரே பாரதியும், கோல்ட்ஸ்மித்தும் ஏன்? கண்ணிழந்தும் பெரும் காப்பியத்தை இயற்றினானே மில்டன், ஏன்? செய்தித்தாள் விற்கும் சிறுவனாக இருந்தும் இரசாயன ஆராய்ச்சிகள் செய்து வந்தானே எடிசன், ஏன்? பனிக்கட்டிகளும், என்றும் இறப்பு நேரும் என்ற உறுதியும் நிறைந்த துருவப்பிரதேசங்களுக்குச் சென்றனரே, சென்றுள்ளனரே வெள்ளையர் பலர், ஏன்? சூறாவளிகள், சுழற்காற்றுகள், மேலிருந்து திடீரென விழும் பனிப்பாறைகள், பனிமூடிய படுகுழிகள் நிறைந்திருக்கின்றன என்பது தெரிந்திருந்தும் 'எவரெஸ்டின்' உச்சிமீது கால் வைத்தே தீருவோம்' என்று போய் உச்சியையணுகும்போது மாண்டு மறைந்தனரே மெலாரியும், இர்வினும் ஏன்? நிலா எக்கேடு கெட்டால் நமக்கென்னவென்றிராது அங்கேற்பட்ட ஒலியை இங்கும் ஒலிக்கச் செய்தனரே விஞ்ஞானிகள் ஏன்? கருத்தினுக் கெட்டாத, எண்ணினாலளப்பரிய பலப்பலப் பல........... கோடி மைல்களுக்கப்பாலுள்ள விண்மீன்களைப்பற்றி நாமேன் கவலை கொள்ள வேண்டும் என்றிராது அவற்றின் நிறையையும், சுற்றளவையும், சூடுநிலைமையையும், பருமனையும், அங்குள்ள மூலப் பொருள்களையும் பற்றி யாராய்ந்து நமக்கெடுத்துரைப்பதிலேயேமுனைந்துள்ளனரே எண்ணற்ற வானநூல் வல்லுநர், ஏன்? பரீட்சையில் தேர்வதற்காகவா? பட்டம் பெறுவதற்காகவா?

'மில்டன், நியூடன் முதலானோரெல்லாம் பேரறிஞர்கள், மேதைகள். அவர்களுக்குப் பரீட்சையிருந்தாலும் ஒன்றுதான், இல்லாவிட்டாலும் ஒன்றுதான். நம்மைப் போன்ற சாதாரண மக்களுக்கு அது பொருந்துமா? என்று நீங்கள் கேட்பீர்கள். ஆனால் நான் கூறுகிறேன் மனிதன் ஒவ்வொருவனும் ஏதாவது ஒரு வகையிலே அறிஞன்தானென்று. குன்றுத் தொடர்களுக்கிடையே பெருமலையொன்று தடார் என்று ஓங்கி வளர்ந்திருத்தல் போல, அறிஞர்களாகிய நம்மிடை

(தொடர்ச்சி 15-ம் பக்கம்)

ரோஜா முத்தையா

# இதற்கு இரண்டாயிரமா ?

## நல்ல தீர்ப்பளியுங்கள்!

[★]

இன்றையத் தேவைக்குப் பிரயோஜனமில்லாமல் புராண காலத்துக்கு—புராணகால நாகரீகத்திற்கு—புராண உயர்வு இழிவுக்கு—புராணக் குப்பைக்கு வக்காலத்து வாங்குகிறது நமது சென்னை மந்திரி சபை. இந்தப் புராண ஆட்சி நம் மக்களுக்குத் தேவையா? நாம் கேட்கிறோம் இந்த நாட்டு மக்களை.

ஏன்? இந்த நாட்டு மக்களால் ஆட்சிக்கு வந்தவர்கள் நாங்கள் என்று ஒவ்வொரு காலத்தில் கூறிவரும் இப்போதைய சர்க்கார், திராவிடரின் ஒரே தினசரியான விடுதலைக்கு ஜாமீன் கேட்டுப் பெற்றுக் கொண்டும்விட்டார்கள். ஜாமீன் கேட்டதற்குக் காரணம் என்ன? இந்த விஞ்ஞான காலத்திலே விஞ்ஞான அறிவைப் பரப்ப வழிவகை செய்யாமல், புராணத்திலே "ரிப்பேர்" செய்ய ஆரம்பித்திருக்கும் சைவ மெய்யன்பர்கள் எப்படிப் பயனில்லாத வேலையைச் செய்யப் போகின்றார்கள் என்று விடுதலை எடுத்துக் காட்டியது ஒரு குற்றமாம். "வகுப்புவாத ஸ்தாபனங்கள் மீது தகுந்த சமயத்தில் அவசியமான நடவடிக்கை எடுக்கப்படும்" என்று வெளியான சர்க்காரின் செய்தியை வைத்துக் கொண்டு, வகுப்புவாத ஸ்தாபனங்கள் எது என்று ஆராய்ந்து வகுப்புகள் உள்ளவரை வகுப்புவாதம் எப்படி இல்லாமற் போகும் என்று கேட்டு, வகுப்புவாதம் ஒழிய வகுப்புகளை ஒழியுங்கள் என்று எடுத்துக்காட்டி, வகுப்புவாதத்தை வெறுக்கும் திராவிடர் கழகத்தின் மீது வகுப்புவாதம் என்கிற மிரட்டலை உருட்டுவார்களேயானால் அது திராவிடர்களின் அழிவாய் இருக்க முடியுமே ஒழிய வேறு எப்படியாகும் என்று விடுதலை எழுதியது மற்றொரு குற்றமாம். இவைகள் குற்றமா என்று உங்களைக் கேட்கிறோம். ஆட்சியில் குந்தவைத்த பொதுமக்களே! வெறுப்பு விருப்பின்றி நல்ல தீர்ப்பளியுங்கள்! [1. 6—1—48ம் நாளும். 2. 7—1—48ம் நாளும் விடுதலையில் வெளிவந்தவை.]

★

(1)

நாட்டில் அறிஞர்கள் செய்ய வேண்டிய வேலைகள் ஏராளமாகக் கிடக்கின்றன. பஞ்சமோ, பட்டினியோ, ஏற்படாமலிருக்கப் பல வழிகளைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டியிருக்கிறது. மக்களின் எண்ணிக்கையோ பந்தயக் குதிரை வேகத்தில் பாய்ந்து கொண்டிருக்கிறது. ஆனால் அதற்கேற்றபடி உணவுப் பொருள்கள் உற்பத்தி அதிகப்படக் காணோம். அதிக வீடுகளைக் கட்டுவதற்கான வசதிகளும் இல்லை. போதிய பள்ளிக்கூடங்களும் ஆசிரியர்களும் இல்லாதபடியால் எல்லோரும் கல்வி கற்க முடியவில்லை. வறுமையோ ஒருபுறம் வாட்டி வதைத்துக் கொண்டிருக்கிறது. பாடுபட்டாலும் அதற்கேற்ற கூலி கிடைக்கவில்லை. பாடுபடாதவனும், உழைப்பதே இழிவு என்று கருதிக் கொண்டிருப்பவனும், உல்லாச வாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கிறான். இவனைப் பார்க்கும் உழைப்பாளியின் உள்ளம் நிமிஷந்தோறும் துடித்துக் கொண்டிருக்கிறது. துணியை நெய்து கொடுப்பவனுக்குப் போதுமான துணி கிடைக்கவில்லை. பல வீடுகளையும், பல மாடமாளிகைகளையும், கூடகோபுரங்களையும் கட்டித் தருபவனுக்கு சொந்தத்தில் ஒரு சிறு குடிசைகூட இல்லை. விளைத்து, அறுத்து, அடித்துக் குவித்துக் கொடுக்கும் உழவனுக்கு மனம் திருப்தியடையும்படியான சோறில்லை; சொந்தத்தில் ஒரு ஏக்கர் நிலமுமில்லை. சேற்றில் இறங்கினால் சிறுமை என்று கருதுபவனுக்கு ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் சொந்தமாயிருக்கிறது. விதவிதமான பல அலமாரிகளைச் செய்து தரும் தச்சனுக்கு சொந்தத்தில் ஒரு 'பெஞ்ச்' கூட இல்லை. பல்லாயிரக் கணக்கான புத்தகங்களை உற்பத்தி செய்யும் அச்சுத் தொழிலாளியின் குழந்தைக்குப் படிக்க வசதியில்லை.

இவ்வாறு எல்லாத் துறைகளிலும் ஏற்றத் தாழ்வுகளும், ஏமாற்றுகளும் ஓரவஞ்சனைகளும், முரண்பாடுகளும், குறைபாடுகளும் இருக்கக் காண்கிறோம். நாட்டிலுள்ள சண்டை சச்சரவுகள், கொள்ளை கொலைகள், கூடா ஒழுக்கங்கள், ஜாதிமதப் பூசல்கள், 'கோர்ட்' விவகாரங்கள் ஆகியயாவும் பெரும்பாலும் மேலே கூறியுள்ள குறைபாடுகளை அடிப்படையாகக் கொண்டிருப்பதை உணரலாம்.

இவைகளுக்குக் காரணம் கடவுளா மனிதனா என்பதே இன்னும் நிச்சயப்படவில்லை, இந்த நாட்டைப் பொறுத்தவரையில். "இவ்வளவும் அவனவன் "தலைவிதி" யால் ஏற்படுபவை; கடவுள் கட்டளை, என்கிறார்கள் பலர். "இவர்கள் நாத்தழும்பேறிய நாஸ்திகர்கள். நாம் கடவுளை அன்பின் உருவமாகக் கருதுகிறோம். ஆதலால் இவர்கள் கடவுள் மீது குற்றஞ் சாட்டுவதை ஏற்றுக் கொள்ள மாட்டோம். இவ்வளவு துயரங்களுக்கும் மனிதனே காரணம், அவனது சட்டதிட்டங்களே காரணம் என்பதே நம் முடிவு. ஆகையால்தான் சமுதாய அமைப்பையே தலைகீழாக மாற்றி விடவேண்டும் என்று முயன்று கொண்டிருக்கிறோம்.

இம்முயற்சியில் எல்லா அறிஞர்களும் அவரவர் சக்திக்கும் வசதிக்கும் ஏற்றவாறு ஈடுபட வேண்டுமென்பதே நம் ஆசை. ஆனால் சைவர்கள் என்ற ஒரு சிறு பிரிவினர் வேறு ஏதோ ஒரு பயனற்ற வேலையில் ஈடுபடுவதைக்கான நாம் வருந்தாமலிருக்க முடியவில்லை.

உதாரணமாக, டிசம்பர் மாதக் கடைசி வாரத்தில் கோயமுத்தூரில் நடைபெற்ற 42-வது சைவர் மாநாட்டில் சைவமத வளர்ச்சியைப் பற்றிச் சில தீர்மானங்களை நிறைவேற்றியிருக்கின்றனர். இன்றைய நிலையில் சைவமத வளர்ச்சி அவசியமா என்பதே ஒரு பிரச்னை. ஏனெனில் அது பற்றி சைவர்களிடையிலேயே முடிந்த முடிவு கிடையாது என்பதை உணர்வோம். 'சைவம்' என்றால் என்ன? புலால் உண்ணாமையா? அல்லது புலால் உண்டு சிவவேடம் தரிப்பதா? சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கு துறைகளிலும் முன்னேறிச் செல்லும் முயற்சியில் ஈடுபடுவதா? அல்லது 'அன்பே சிவம்' என்பதை மட்டும் உணர்ந்து அதன்படி நடப்பதா? அல்லது 'தோடுடைய செவியன் விடையேறி வீதிவரும்போது அவனுக்கு முன்புவரும் வேதபாராயண முப்புரி நூல் கோஷ்டியார் காலில் வீழ்ந்து வணங்குவதா?

இவைகளைப்பற்றி இங்கு ஆராய விரும்பவில்லை நாம். சைவத்தை வளர்க்கட்டும், சைவப் பெரியார்கள். அவர்களது சிறுவர்களை உலகாயுதக் கல்வி பயில அனுப்பாமல், உழவாரப் பணிக்கு அனுப்பட்டும்! அது அவரவர் பிரியம்!

ஆனால் தாங்கள் "எல்லாம் வல்ல ஈசனை," "எங்கும் நிறைந்த பரிபூரண சொரூபியை," காப்பாற்றுவதற்குப் புறப்பட்டிருப்பதுதான் நகைப்புக்கிடமாயிருக்கிறது! நமக்குமட்டுமல்ல! முக்கண்ணன் முகத்தில்கூட புன்முறுவல் பூத்திருக்கும்!

"பேசும் படங்களில் புராணக் கதை

(தொடர்ச்சி 14-ம் பக்கம்)

ரோஜா முத்தையா

# சொர்க்கமாவது நரகமாவது!

★

பசித்துன்பத்தால் வருந்தும் மக்களே! உங்களுக்கு இப்பொழுது அரை வயிற்றுக் கஞ்சி வேண்டுமா? இன்னும் பத்து நாட்கள் கழித்து நல்ல விருந்து சாப்பாடு வேண்டுமா? என்று கேட்டால் அவர்கள் என்ன சொல்லுவார்கள்? "பத்து நாட்கள் கழித்து விருந்து கிடைப்பது இருக்கட்டும்; அது வரையிலும் யார் உயிர்வாழப்போகிறார்கள்? இப்பொழுது போகும் உயிரை நிறுத்தி வைப்பதற்காக அரை வயிற்றுக் கஞ்சியே போதும்" என்று தானே சொல்லுவார்கள்.

குந்தக்குடிசையில்லை; ஒண்ட மர நிழல் கூடக்கிடைக்க வில்லை; வெய்யிலால் வெதும்புகிறார்கள்; மழையால் வருந்துகிறார்கள்; பனியால் நடுங்குகிறார்கள்; இவர்களைப்பார்த்து, இப்பொழுது உங்களுக்கு ஒரு குடிசை வேண்டுமா? அல்லது இன்னும் பத்து ஆண்டுகள் கழித்தபின் ஒரு தோட்டத்தோடு கூடிய மாளிகை வேண்டுமா? என்று கேட்டால் அவர்கள் என்ன சொல்லுவார்கள்? "பத்து வருஷங்களுக்கு உயிரோடிருப்பது என்ன நிச்சயம்; இப்பொழுது ஒரு குடிசை கிடைப்பதே போதுமானதாகும்." என்று தானே கூறுவார்கள்?

"நாளைக்கு வரும் பலாப்பழத்தை விட இன்று கிடைக்கும் களாப்பழம் நல்லது" என்பது பழமொழி. ஆகவே இப்பொழுதைய துன்பம் தாங்க முடியவில்லை; இதை நீக்கிக் கொள்வதற்கு உதவிவேண்டும்; இதற்குக் கிடைக்கும் உதவியை அலட்சியம் செய்யாதிருத்தலே அறிவுடையார் செய்கை. இன்னும் பத்தாண்டுகள் கழித்து ஏராளமான இன்பத்தை அனுபவிக்கப் போவது உண்மையாக இருக்கலாம்; ஆனால் இப்பொழுதுள்ள துன்பத்துக்கு வழி யென்ன? பத்து ஆண்டு கழித்து இன்பங்கிடைக்கும் என்று நினைத்துக் கொண்டு அதுவரையிலும் துன்பத்தையே அனுபவிப்பதா? கிடைக்கும் இன்பங்களையும் முன் பின் ஆலோசியாமல் துறந்து விடுவதா? இச்செயல் மனித வாழ்வின் தன்மைக்குச் சிறந்ததாகுமா? ஒரு நாளும் சிறந்ததாகாது என்பதே நமது முடிபு.

இச்செய்தி வெகு சாதாரணமானது; எல்லோராலும் அறியக்கூடியதாகும்; இவ்வுலகில் நாமே கண்கூடாகப் பார்க்கக்கூடிய இவ்வனுபவத்தை வைத்துக் கொண்டு கொஞ்சம் மத விஷயத்திலும் கவனஞ்செலுத்தினால் பல உண்மைகளை அறிந்து கொள்ளலாம்.

மக்களுக்குள் பல விஷயங்களில் வேற்றுமையுண்டு; ஒருவர் கிழக்கு நோக்கினால் மற்றொருவர் மேற்கே பார்ப்பார்; ஒருவர் தெற்கு நோக்கினால் மற்றொருவர் வடக்கு நோக்குவார், ஒருவர் தாடி வளர்க்கவேண்டுமென்றால் மற்றொருவர் மழுங்கச் சிரைக்கவேண்டும் என்பார்; இவ்வாறு எல்லா விஷயங்களிலும் மக்களுக்குள் எண்ண வேறுபாடுகள் உண்டு. ஆனால் ஒன்றில் மாத்திரம் எல்லோருக்கும் ஒருமித்த கருத்துண்டு. அது "நாம் இவ்வுலகத்தில் துன்பமின்றி இன்பமாக வாழவேண்டும்" என்பதாகும். இதை வேண்டாமென்று வெறுப்பவர் யாருமில்லை.

"இவ்வுலக வாழ்க்கையில் இன்பமில்லை; துன்பகரமானது; அன்றியும் நிலையாமையையுடையது; இன்பம் போலக் காணப்படினும் அது நிலையுள்ள இன்பமாகாது; ஆதலால் மறுவுலக இன்பம், அதாவது மோட்ச சுவர்க்க இன்பம் ஒன்றே அழியாத இன்பமுடையது; அதை நாட முயல வேண்டும்" என்று கூறுவோர் சிலருண்டு.

இவர்களே தத்துவஞானிகள் என்று சொல்லப்படுவார்கள்; வேதாந்திகள் என்றும் கூறப்படுவார்கள்; வைதீகர்கள் என்றும் அழைக்கப்படுவார்கள்; மதவாதிகள் என்றும் சொல்லப்படுவார்கள்; இவர்கள் இவ்வுலக இன்பத்தை உண்மையில் வெறுப்பவர்களாயிருந்தாலும், இன்பமே வேண்டாமென்பது இவர்கள் நோக்கமல்ல. பைத்தியக்காரத்தனமாக அழியாத இனபம் என ஒன்று வேறு எங்கேயோ ஓர் உலகத்திலிருக்கிறதென்று நம்புகிறார்கள்; இந்நம்பிக்கை காரணமாக அந்த அழியாத இன்பத்தைப்பெற இவ்வுலக இன்பத்தை வெறுக்கிறார்கள். எனவே இவர்கள் கருத்தும், இன்பம் அனுபவிக்கவேண்டும் என்பதைத்தவிர வேறொன்றும் இல்லை என்பதை அறியலாம்.

இன்பம் அனுபவிக்கவேண்டும் என்பதில் எல்லாருக்கும் கருத்து ஒற்றுமை இருந்தாலும், அதை அடைய முயல்வதில் சிலர் வெற்றி பெறுகிறார்கள்; பலர் ஏமாறுகிறார்கள்; ஏமாறுகிறவர்கள் தமது நோக்கம் வெற்றிபெறாமல் வாழ்நாள் முழுதும் வருந்தி மடிகிறார்கள். இந்த ஏமாற்றத்திற்குக் காரணம், பகுத்தறிவின்மை—பயங்கொள்ளித்தனம் என்று கூறி விடலாம். சுயநலவாதிகள்—மதவாதிகள் என்பவர்கள் மக்களுடைய மனோபாவத்தை நன்கறிந்தவர்கள்; கூர்மையான மதிவன்மையுடையவர்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் சுயநலத்தை மாத்திரம் கைவிடாதவர்கள்; ஆதலால் மக்களை ஏமாற்றுவதற்குப் பல தந்திரங்களைக் கற்பித்துள்ளனர். அத்தந்திரங்களினாலேயே மக்களும் ஏமாறுகின்றனர்.

ஒவ்வொரு மனிதனிடத்திலும் கீழ் வரும் எண்ணங்கள் உள. காடு வாவா என்று சொல்லவும், வீடு போபோ என்று வழியனுப்பவும் உள்ள கிழவனிடத்தும் இவ்வெண்ணங்கள் உள; ஒவ்வொரு மனிதனும் தான் எப்பொழுதும் இளமையோடு வாழ அவாவுறுகின்றான்; நல்ல அழகிய இளமை மாறாத பெண்களுடன் கூடி வாழ ஆசைப்படுகிறான்; தனக்கு ஏராளமான செல்வம் இருக்கவேண்டும் என்று விரும்புகிறான்; தான் நினைத்தவைகள் யாவும் துன்பமில்லாமல் நினைத்தவுடன் கிடைக்குமானால் கவலையில்லாமல் வாழலாம் என்று எண்ணுகிறான். இவ்வாறு எண்ணாத மக்கள் யாருமே இல்லையென்று கூறி விடலாம். இவை பொதுவாக மனிதர்களுடைய மனோபாவமாகும். இந்த மனப்பான்மையை மதவாதிகள்—வைதீகர்கள் நன்கறிந்தவர்கள்.

இத்தகைய மனோபாவமுடைய மக்களை ஏமாற்றவே சுவர்க்கம் என்பதைச் சிருஷ்டித்திருக்கிறார்கள். சுவர்க்கத்தில் இருப்பதாகக் கூறப்படும் பொருள்களை ஆராய்ந்தால் இவ்வுண்மை விளங்கும்.

முதலாவது அங்கே உண்ண அமிர்தம் இருக்கிறது. அமிர்தத்தை உண்பவர்கள் சாவாமல் இருப்பார்கள்; இளமைகூட மாறாமல் இருப்பார்களாம்; இவைகளுக்கு நரை, திரை, மூப்பு, பிணி முதலியன இல்லையர்ம். ஆகவே அங்கு சென்றவர்கள் இறக்காமல் உயிர் வாழலாம் என்று கூறினார்கள். சாவுக்கு அஞ்சும் மக்கள் இத்தகைய உலகை விரும்பாமல் இருப்பார்களா?

இரண்டாவதாக அங்கு அரம்பை மாதர்கள் இருக்கிறார்கள்; அழகு மாறாதவர்கள்; சுவர்க்கஞ் சென்றவர்கள் யாரும் கட்டுத்திட்டமின்றி அவர்களை அனுபவிக்கலாம்; அவர்களை மணந்து கொள்ளலாம்; அவர்களுடன்

[தொடர்ச்சி 13ம் பக்கம்]

## ஆணுக்கு ரம்பையர்! பெண்ணுக்கு யாரோ?

கதை கற்பனை.

சிறுகதை
முதற்பருவம்.

# நல்ல தீர்ப்பு!

போட்டி
எண் 4.

இளமை மின்னும் கன்னியின் எழிலுடலைப்போன்று பளபளக்கும் பளிங்குக் கல்அறை...அசையாது வீற்றிருக்கும் நீதிபதிக்கு வழியாத வியர்வையை ஆற்ற மின் விசிறிகள்......

பட்டுவைத்துத் தைத்த பஞ்சு மெத்தை—வக்கீல்களும் ஜூரிகளும் உட்கார...! கொஞ்சமேனும் வறுமையின் சுவையறியாத, மடிப்புக் கலையாத உடை தழுவும் உடல்கள்......

கூண்டிலே...குற்றவாளி... குற்றுயிரான நிலையிலே...வாழ்வின் வறுமைப் பிடிப்பிலே இரத்தம் வடிக்கப் பெற்று வதைந்த உடல்...எண்ணத்திலே ஏக்கம் சுழல இதயம் வற்றிய ஏழை...... கன்னங்கள் ஒட்டி, கண்கள் குழிந்து, சிக்கடைந்த தலையிலே செம்மை தோய்ந்த சோகச் சித்திரம்......

"குழந்தையைக் கொன்றது உண்மைதானா"......

"ஆம். உண்மைதான்......"

நீயும் தற்கொலை செய்ய முயற்சித்தது உண்மைதானா......"

"ஆம்...உண்மைதான்..."

நீதிபதி திகைத்தார்...நெஞ்சம் கல்லாக்கப்பட்ட நிலையிலுள்ளாளோ அப்பெண் என்று......! தன் குற்றத்தை......கொலைக் குற்றத்தை...... தானாகவே...எவ்வித எதிர்ப்பையும் காட்டாது ஒப்புக் கொண்டாள் ஒரு பெண்மணி...அவர் வாழ்விலே நடந்த அதிசய சம்பவங்களில் ஒன்று.........

சட்டத்தின் கொடிய தன்மையைக் கடைசி எழுத்துவரை வடித்தெடுத்து மற்றோர் வாழ்க்கைக்கு வரையறை காட்டும் நீதிபதி...மதிக்கு மதிப்பளிக்காமல், ஏட்டிலே தீட்டிய எண்ணற்ற மடமைகளை நாட்டிலே நடத்திக் காட்ட வேண்டி, நலமிக்க மக்களின் நலங்குலைக்கும் நீதிபதிதான் திகைத்தார்......பகுத்தறிவு வாதியைக் கண்டு பழமையாளர்கள் திகைப்பதைப் போல!

தினமும் வக்கீல்கள் தமது வாதத் திறமையை வழக்கிலே வடிக்க, வடிக்கப்பட்ட வாதத்திலே கண்ட சிறு இழைகளை வைத்து 'நீதி' செய்து, அப்படி செய்யப்பட்ட நீதித் துணியாலே சமூகப் பயங்கரச் செயலாகிய 'நிர்வாணத்தை' மறைத்துவிடுவதாக மனமகிழும் நீதிபதிதான் மிரண்டார் ......மங்கை தந்த மறுமொழி கேட்டு...

கோமள உள்ளக் குழந்தையின் கழுத்தை நெரித்துக் கொன்ற காதகி ...கல்லும் உருக, புல்லும் தழைக்கப் பண்பாடும் கிள்ளையெனப் பசுந்தமிழில் மழலை வடிக்கும் மாசற்ற மதிமுகக் குழவியின் குற்றமற்ற உயிரைப் பிரித்த கொடுங் கரங்களைக் கொண்ட காதகி......சித்தம் கலங்காது, சிதைக்கப்பட்ட தன்வாழ்வுச் சித்திரத்தின் உயிர் தன் கையாலே போயுங்கூடத் தளராத மனதுடன், தயங்காத கண்களுடன் நிற்கின்ற அந்தக் காட்சி நீதிபதியின் முன்நின்றது......சிந்தனையைத் தூண்டிவிடுகின்ற நிலையிலே.

* *

ஆம்...நான்தான் கொன்றேன்...... நான் பெற்ற பைங்குழவியை...எனக்கு உரிமையான என் குழந்தையைக் கொன்றேன்...... உண்மை....வறுமையில் வாடி வதங்கி, வாழ்வைப் பயணமாக வைத்து, கற்பைக் காசுக்கு இரையாக்கி, கரையான் அரிக்கும் விதமாய் துயரம் உள்ளத்தையும், உடலையும் அரிக்க, பற்றற்று நிற்கும் முல்லைக் கொடிபோல, புயற்காற்றிலே உள்ளம் ஒடியும்போது ஒரு சொல் சொல்லி மனப்புண் ஆற்ற ஒருவர்கூட இல்லாத வேளையிலே......

வேதனையின் எல்லையில் நின்று வாதனையால் துடித்துக் குமுறும் பொழுது 'விதி'யை மருந்தாகக் கொண்டு ஆற்றி, வாழைத் தண்டொத்த என் குழவி வாடி வதங்கி, என் இரத்தத்தை உறுஞ்சுங்கால் ஒன்றும் வராமையினால் ஒட்டிய உடலுடன் உருக்குலைந்த காட்சியளித்து என் உள்ளத்தை வருத்துகின்ற வேளையிலே.........

கொலைகாரி என்றென்னைக் கூசாது, குமுறாது, வெட்கங்கொள்ளாது கேட்கின்ற நீதி எங்கு சென்றது..........

பச்சைக் குழவி பசியாலே பதைபதைத்து பாலின்றி, கத்தக்கூட வலுவின்றி எலும்பும் தோலுமாக ஏறிட்டுப் பார்க்க என்னைத் தவிர யாருமில்லாத வேளையிலே...தாயின் அன்பாலே தத்தளிக்கும் என் உள்ளம்... பேயுள்ள மாக்கப்பட்டதுதான் பெருந்தவறா?... அல்லது அந்நிலையில் உயர்வு தாழ்வு பேதம் கற்பித்து உல்லாச வாழ்வில் உழைக்காதவர் வாழ, உழைப்பவர் தாழ வகுத்த உங்கள் நீதியின் தவறா......?

ஆம்! அன்று...நான் அரும்பாக இருந்த காலத்து, என்னைக் களிப்புப் பொருளாகக் கருதி வந்த காதலன்... இல்லை காதகன்...'காதலி' என்றென்னை அழைத்துக் கனிமொழி பேசி, காமக்களியாட்டத்திற்குக் கருவியாக வைத்துக்கொள்ள கல்யாணம் செய்து கொள்வேன் என உறுதிகூறி, கூட்டி வந்தபின் கர்ப்பமுற்றது கண்டு கைவிட்ட காதகனிடம், நான் என் வாழ்வை நடத்தும் பொருட்டு 'ஜீவனாம்சம்' கேட்டபொழுது, அவன் உயர்சாதி நான் கீழ்சாதி என்று உயர்வு தாழ்வு கற்பித்து, என்னை நடுத்தெருவில் விட்டுத் தத்தளிக்க வைத்த உங்கள் நீதியின் தவறா?......

யார் தவறு...நான் இந்நிலை அடைவதற்கு என்று உங்களைக் கேட்கிறேன்...நேர்மையான நீதியின் பேரால்! சட்டத்தின் பெயராலல்ல...சட்டம் ஒட்டகத்தின் கூனலைப் போன்ற நிலையில் இருக்கின்ற காரணத்தால்......

அன்று நான் என் வாழ்விற்கு வகை செய்யவேண்டுமென்று கேட்டேன்... அதற்கு நீங்கள் மறுத்தீர்கள் சட்டத்தின் பேரால்......இன்று நான் வாழ்வில் வகையற்ற நிலையிலே குழவியைக் கொன்று தற்கொலை செய்து கொள்ள விரும்பினேன்...ஆனால் அதே சட்டம் என்னைத் தடுக்கிறது......

அன்று என்னைப் பட்டினியால் சித்திரவதை செய்வதற்கு சித்தமாயிருந்த சட்டம் இன்று என் வாழ்வைப் பற்றி ஏங்குகிறது...என்னே நீதியின் நேர்மை......

நான் பேயுள்ளம் படைத்தவளல்ல...தாயுள்ளம் படைத்தவள்... அதனால்தான் கொன்றேன்...இவ்விவாதம் உங்களுக்கு விசித்திரமாகப் படலாம் — வேதனை என்பது ஏதென்று அறியாத வளமை வாழ்விலே நீவிர் வாழ்ந்த காரணத்தால்! வறுமையால் அறைக்கப்பட்டு உள்ளம் சுக்கு நூறாகி இருக்கும் போழ்து... உயிருடனே சித்திரவதை செய்யப்படும் சிசுவின் சித்தம் துடிப்பதைச் சிறிதும் பொறாத நிலையிலே—சித்தத்தைக் கல்லாக்கிய பின்தான் சிசுவைக் கொன்றேன்...மனித உணர்ச்சியுள்ள எந்த உயிரும் என் நிலையிலே இருந்தால் வேறென்ன செய்திருக்கும்......?

நான் என் குழந்தையைக் கொன்றேன்......அதைப்பற்றி உங்களுக்கென்ன கவலை?...அது பிறந்து ஆழியில் சுழல் காற்றில் அகப்பட்ட கட்டுமரமாய் வறுமையில் திண்டாடி திணறித்திக்கின்றித் தவிக்கும்வேளையிலே ஏதும் அறியாதவர்போல்

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

# கடவுளுக்குள்ளும் தீண்டாமை!!!

★

நேயர்களே! கற்பனைக்கடவுளுக்குத்தானே கதைகளைக் கற்பித்துக்காசை விரயம் செய்து திருவிழாவும், திருக்கல்யாணமும் செய்துவைக்கின்றனர் மதியிலிகள், இதிலே ஆண் கடவுள்பெற்ற அற்புதவல்லன் என்றோ, பெண்கடவுளின் சுருண்டமீசையிலே கட்டி இழுத்த சும்பன் என்றோ கூறுவதிலே என்ன வியப்பு இருக்கிறது, எப்படி நடத்தினால் என்ன? என்று எண்ணலாம், சரியும் ஆகும். ஆனால், ஆலயத்தை திறவுங்கள் திறவுங்கள் என்று ஆர்ப்பரித்த திருவாங்கூர் தேசத்தொண்டர்களின், அதிலும் இந்து மதத் தொண்டர்களின், சிந்தனையிலே இது எட்டவில்லையே என்பதைக் காட்டத்தான் இதை எழுதுகிறேனே தவிர வேறல்ல என்பதை முதலிலே கூறிக்கொள்ளுகிறேன்.

முதன் முதலாக திருவாங்கூர் மகாராஜா அவரது ஆதீனத்திற்குள்பட்ட எல்லா ஆலயங்களையும் திறந்து வைத்து, அதிலே ஒரு நல்ல பெயர் சம்பாதித்தது நேயர்களுக்கு ஞாபகமில்லாமலிருக்காது. ஆனால் தீண்டாமை யென்ற தீமை, மக்கள் பிறவியிலே அதிலும் நம் நாட்டு இந்துக்கள் என்று சொல்லிக்கொள்ளுவோர் இடத்தில் தான் அது உன்னத நிலையில் இருக்கிறது என்று எண்ணுவதற்கும் மாறாக ஒரு நிகழ்ச்சி நடந்து வருகிறது. (திருவாங்கூரிலேஉள்ள பிரதான கோயில் ஒன்றிலே—ஆலயப்பிரவேசம் கொடுக்கப்பட்ட கோயிலிலே.)

அகலிகையின்மேல் மோகங்கொண்டு, அர்த்த ராத்திரியிலே வந்து கோழியாகக்கூவி முனிவரை சமயமறியாமல் ஏமாற்றி, அவரை ஆச்சிரமத்திலிருந்து வெளியேறச் செய்து, ஆசையைப் பூர்த்தி செய்ததை அறிந்த முனிவர் "உன் அங்கமெல்லாம் ஆயிரம் யோனியாக ஆகட்டு"மென்று சாபமிட அதைப் பெற்று, பின் தீர்த்துக்கொள்வதற்காக, தேரையில்லா (தவளை) தெப்பக்குளத்திலே நீராடி நடு இரவிலே சிவபெருமானுக்கு பூஜை செய்து இந்திரன் பாபவிமோசனமடைந்த இடமென்று கூறிவரும் "சுசீந்தரம்," என்ற சிவபெருமான் கோயிலின் திருவிழாவில் ஒரு நிகழ்ச்சி நடைபெறுகிறது.

பரமனின் திருவிழாவிற்குப் பக்கத்து ஊர்களிலே வசித்து வரும் மைந்தர், சுப்பிரமணியன்களிலே இருவரும், விநாயகரில் ஒருவரும் அழைக்கப்படுவர். இதிலே, விநாயகருக்குப்பிரதான கோயிலுக்குள்ளே தங்க அனுமதி கிடைக்கும், மற்ற இரு சுப்பிரமணியர்களுக்கும் உள்ளே வர அனுமதி கொடுக்கப்பட மாட்டாது. பக்கத்து வீதியில் உள்ள மண்டபங்களில்தான் தங்கவேண்டும். விழா நடைபெறுகிறபோது பவனியிலே கலந்துகொள்ளவும், முடிவிலே தங்குமிடங்களுக்குப் போய்விடவுமாக சில நாள்கள் நடைபெறும். கடைசி நாள் பவனி முடிந்ததும் பரமசிவன் உள்ளே போவார்—உடனே திரும்பவெளியேவருவார், பின்னும் போவார்-வருவார். இப்படிப் பல தடவைகள் நடக்கும். அப்பொழுது மைந்தர் இரண்டு பேரும் வெளியே நின்று கவலைப் படுவார்கள். தந்தைக்கு மகனை யெண்ணிவருத்தம், ஏன்? உள்ளே நுழைய முடியாமலாகி விட்டானே யென்று.

(காப்பி, சாப்பாடு விடுதிகளிலே, பெருவியாதியஸ்தர்களும், தொத்து நோயாளிகளும் உள்ளே புகக்கூடாது என்று எழுதித் தொங்கவிடுவதைப்போல இங்கும் இவர்களுக்கு ஏதாகிலும் ஏற்பட்டிருக்குமோ என்று எண்ணிவிடாதீர்கள்.)

கடைசியிலே திருவாங்கூர் நாணயத்திலே கொஞ்சம் கொடுத்துப் "போய் வாருங்கள் மக்களே" யென்று அனுப்பி வைக்கிறதும் வழக்கமாக நடைபெற்று வருகிறது. இதிலே கவனிக்க வேண்டியது, வந்த மைந்தர்களிலே மூத்த மகன் பிள்ளையாரை உள்ளேவர அனுமதிக்கப்படுவதும் தம்பிகளை வெளியே தங்க வைப்பதும் எதற்காக என்பது.

தீண்டாத குலத்திலே வேடர் குல மகளாய்ப் பிறந்த வள்ளியென்ற மங்கையை மனைவியாகக் கொண்டதினால் அவனும் தீண்டப்படாத பட்டியலிலே சேர்க்கப் பட்டுவிட்டானாம், அதனாலேயே ஆலயத்தினுள்ளே புகக்கூடாதாம்.

ஆலயத்தினுள்ளேயே சுப்பிரமணியனுக்காகத் தனி ஒரு கோவிலும், அவருக்கு உண்டியும் உடையும் அளிக்கப்படுகிறதே, பின் இவர்களையும் ஏன் உள்ளே அனுமதிக்கக்கூடாதுஎன்றால், உள்ளே இருக்கும் முருகன் வள்ளியை மணம் செய்வதற்கு முன்னே உள்ள பருவமாகக் கருதப்படுவதால் தானாம், போகட்டும். அன்றல்லவா இன்னின்ன சாதியார் தான் இன்னின்ன இடங்கள்வரை போகலாம் உள்ளே என்ற கட்டளை வழக்கத்திலிருந்தது. இப்பொழுதுதான் பார்ப்பானைத் தவிர மற்றைய இந்து என்று நெற்றியிலே பட்டையாக விபூதியை அணிந்துகொள்ளும் அனைவரும், உள்ளே குறிப்பிட்ட இடங்கள் நீங்கலாகப் போகலாம் என்று மன்னரால் உத்தரவு பிறப்பித்த பிறகு, ஏன் கடவுளின் சொந்த மைந்தனுக்கு அதிலும் தகப்பனுக்கு உபதேசம் செய்த குரு பரனுக்கு இன்னமும் கோயிலுக்குள்ளே போகக்கூடாது என்ற வழக்கம் இருக்க வேண்டும். ஆலயத்தைத் திறந்துவிட்டதிலிருந்து இன்று வரையிலும் ஒருவர் சிந்தனையிலாவது இந்த எண்ணம் உண்டானதாகக் காணவில்லை யென்றாலும், இன்றைய அரசாங்கமாவது இந்த நிகழ்ச்சிகளை மாற்றி நடத்துவோம் என்று எண்ணிற்றா என்றால்அதுவும்இல்லை. இதிலிருந்து மக்களிலே தீண்டாமை ஒருவாறு தீர்ந்தாலும், கடவுளுக்காகிலும் கட்டாயமாக இருக்கத்தான் வேண்டுமென்ற எண்ணந்தானே?

தீண்டாமை எங்களது வேண்டாமை யென்ற திருவாங்கூர் தோழர்களே! இதையும் தெரிந்து கொள்ளுங்கள் என்று தான் கூறுகிறேன். "தாணு"

## வரப்பெற்றோம்.

பட்டுக்கோட்டைத் தோழர் வி. இராசகோபாலனும், விசாகைத் தோழியர் ஜி. மீனாட்சியும், தோழர் சந்திரசேகரன் அவர்கள் தலைமையில் 24—6—48-ம் நாள் செய்து கொண்ட சீர்திருத்தத் திருமணத்தின் நினைவாக அனுப்பித் தந்த நன்கொடை ரூபாய் ஒன்றும்வரப்பெற்றோம். [ஆ—ர்]

# பெரியார் மாளிகையில் புரட்சிக் கொடி!

## யானைமீது கருப்புச்சட்டை வீரன்!

### சைக்கிலில் பத்து மைல் தூர ஊர்வலம்.

### ஈரோட்டில் திராவிடநாடு பிரிவினை நாள்!

★

1—7—48 தேதி திராவிடநாடு பிரிவினை நாள் கொண்டாட்டம் ஈரோட்டில் அதிவிமரிசையாக நடைபெற்றது.

காலை $7\frac{1}{2}$ மணிக்கு சைக்கிலில் தொண்டர்கள் கருப்புச்சட்டையுடனும், புரட்சிக் கொடியுடனும் புறப்பட்டு செல்ல காரைவாய்க்கால் மைதானத்தில் நகர திராவிடர் கழகத்தலைவர் தோழர் எஸ். ஆர். சந்தானம் அவர்களால் கழகக்கொடியேற்று விழா நடைபெற்றது. அதன் பிறகு சைக்கில் ஊர்வலம் நகரிலும், சுற்றுப்புறமுள்ள கருங்கல் பாளையம், பெரியக்கிராரம், வீரப்பன் சத்திரம் ஆகிய பகுதிகளிலுமாக பத்துமைல் தூரம் நடைபெற்றது. வழி நெடுக திராவிடநாடு திராவிடருக்கே என்ற பேரொலி.

பெரியார் அவர்கள் மாளிகையிலும், தோழர்கள் பலர் வீடுகளிலுமாக சுமார் 20 இடங்களில் கழகக் கொடியேற்றுவிழா நடைபெற்றன.

மாலை 5 மணிக்குப் பன்னீர்ச் செல்வம் பார்க்கிலிருந்து ஊர்வலம் புறப்பட்டது. முன்னே யானை மீது தொண்டர் ஜக்கிரியா புரட்சிக் கொடியுடன் கம்பீரமாகச் செல்லவும், பின்னே கருப்புச்சட்டையுடன் தோழர்கள் பலர் திராவிடநாடு திராவிடருக்கே என்ற பேரொலியுடன் போகவும், வழி நெடுக ஏராளமான மக்கள் பார்த்துப் பூரிப்படைந்ததும் கண்கொள்ளாக்காட்சியாக இருந்தது.

மாலை 7 மணிக்கு காரைவாய்க்கால் மைதானத்தில் தோழர் புலவர் நா. மு. மாணிக்கம் அவர்கள் தலைமையில் பொதுக் கூட்டம் கூடியது. திராவிடநாடு பிரிவினை நாள் அறிக்கையைத் தோழர் சுப்பையன் அவர்கள் படிக்க நகரத் திராவிடக் கழகத் தலைவர் தோழர் எஸ். ஆர். சந்தானம் அவர்கள் அதை ஆதரித்தார். அதன்பின் தோழர்களான அப்பாவு அவர்களும் ஈரோடுவாசி ஆசிரியர் தோழர் பி. சண்முகவேலாயுதன் அவர்களும் அந்த அறிக்கையை விளக்கிப் பேசினார்கள். கூட்டத்தினர் எழுந்து மவுனமாக நின்று, தலைவர் "திராவிடநாடு சுதந்தர நாடாகும்வரை கிளர்ச்சி செய்தே தீருவோம்" என்று கூறிய உறுதிமொழியையேற்றனர். $9\frac{1}{2}$ மணிக்கு தோழர் பெருமாள் அவர்கள் நன்றி கூற கூட்டம் வெகு சிறப்பாக நடந்து முடிந்தது.

ஷை விழாவின் விளைவாக நகர மக்களிடையே நல்லதொரு புத்துணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. விழாவன்று சந்தை நாளாக இருந்தும் பொது மக்கள் திரண்டு வந்து கடைசிவரையிலும் பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டதானது நமது முயற்சிக்கு ஊக்கம் அளிப்பது போலாகும்.

★

(5ம் பக்கத் தொடர்ச்சி)

இருந்த அரசாங்கத்தார் அது இறந்த உடன் இரக்கம் காட்டவேண்டியதின் காரணம்?......

நீவிர் காசு கொடுத்துக் கடைத் தெருவில் வாங்கிய பழத்தைத் தின்றால் உங்களைத் தண்டிப்பவர் ஒருவருமிலர்...ஆனால் என் உயிரினுமினிய கற்பைப் பயணம் வைத்து வாங்கிய சிசுவைச் சிதைத்தால் மட்டும் உங்கள் சித்தம் வாடக் காரணம்?......

நான் தற்கொலை செய்ய முயற்சித்தேன்...ஆம்!...வறுமையிலே வாடி அணு அணுவாகச் சித்திரவதை செய்யப்பட்டு, சீரழிந்து சாவதைவிட, சிறிது உடலில் தெம்பு இருக்கும் போதே செத்துத் தொலைவது நல்லதென்று எண்ணிய காரணத்தால்!......

அதை ஏன் தடுத்தீர்கள்?...வாழ்வுக்கு வகை செய்யாத நீதி, வாழ்வு வதையுறுவதைக் கண்டு வாழ்வையே அழித்துக்கொள்ள விரும்பும் ஒரு பெண்ணைப்பற்றி பச்சாதாபப்பட வேண்டியதின்காரணம்தான்என்ன?...

*　　　*

திடுக்கிட்ட நீதிபதி தன் சிதறிய சிந்தனையைச் சேர்த்தொன்றாக்கியபின் கூறினார்... "குழவியைச் கொன்றகாரணத்தாலும், தன்னைத் தானே கொல்ல முயற்சித்த காரணத்தாலும்...தூக்குத் தண்டனை......

*　　　*

சிங்கார மெத்தை...சிரிக்கின்ற மின்விளக்கு...சித்தம் கவரும் படங்கள்...சிந்தனையில் மத்தியானம் அவள் 'நினைவில்' மொழிந்த மொழிகள்...நித்திரையில்......

அறை முழுவதும் நிரம்பியது சிரிப்பொலி மின்விளக்கின் ஒலி போல......

சிரித்துக் சித்தம் கலக்குபவள் யாரென்று நோக்கினார்...மின்னொளியில்......

கூண்டில் நின்ற அதேகைதி...... அதேபெண்......

கழுத்திலே ஒரு முழக்கயிறு சுருக்கிடப் பட்ட நிலையிலே......

சிரித்தாள் மறுபடியும்......

சிந்தைகலங்கினார் நீதிபதி...சித்தம் சிதைந்தது விடுமோ எனப் பயந்து......

"என் இங்கு வந்தாய்......" ஒலி வெளிவரவில்லை.........உதடுமட்டும் அசைந்தது......

"என் இங்குவந்தேனா?...அன்று... சிரிப்பாலே சித்தம் மயக்கிய சிங்காரி என்று சொன்ன அதே வாய்தானா இன்று எங்கு வந்தாய் என்று கேட்கிறது......

"ஆ...நீயா ...பார்வதி...நீயா......"

"ஆம் அதே பார்வதி தான்...படுக்கையறைப் பார்வதியாக, உள்ளத்திற்கும் உடலுக்கும் உவகை அளித்த பார்வதியாக இருந்த பார்வதி தான் உங்கள் முன்...உயிரற்ற நிலையிலே...உங்கள் தீர்ப்பின் முடிவாக......

நானாக இறந்து விடலாமென்று முயற்சித்தேன்...ஆனால் அன்று ஜீவனாம்சம் தரமாட்டேன் என்று வாதாடி இன்று நீங்களாகவே என்னைத் தூக்கி விட்டு விட்டீர்கள்......

நான் என்னுயிரைத் தற்கொலை செய்ய உரிமை இல்லை...ஆனால் நீங்கள் என்னுயிரைக் கொலை செய்யலாம்...ஆனால் அதற்குத் தண்டனை கிடையாது...என்னேநீதி......

'உங்கள் மனைவியுடன் நீங்கள் வாழக்கூடாது...இன்னொருவன் தான் வாழவேண்டும்' என்றால் நீங்கள் பொறுப்பீர்களா?......

நானும் ஒரு முழக் கயிற்றிலே உயிர் விடப் போனேன்...ஆனால் அதைத் தடுத்து விட்டு இன்று என்னை அவ்வொரு முழக் கயிற்றினாலே தூக்கிலிடுகிறீர்கள்........"

"பார்வதி...பார்வதி...என்னை மன்னிப்பாயா...மண்டியிடுகிறேன் பார்வதி...நான் செய்த குற்றங்களை நீ மன்னிப்பாயா" என்று கத்தி விட்டார் உணர்ச்சியில்லாத நிலையில்......

பக்கத்தில் படுத்திருந்த நீதிபதி நமச்சிவாயமய்யரின் மனைவி மரகதம் அவரைத் தட்டி எழுப்பி 'யார் அந்தப் பார்வதி' என்று கேட்டாள்......

# குடி அரசு

3—7—48 சனிக்கிழமை.


## இந்தி வந்து விட்டது?

★

இந்தி வந்து விட்டது! அதுவும் கட்டாய இந்தியாக வந்து விட்டது! இந்தநாட்டு மக்கள் வெறுத்துத் துரத்திய இந்தி வந்து விட்டது! அதுவும் இந்த நாட்டு மக்கள் வெறுத்த ஆச்சாரியார் கவர்னர்-ஜெனரலாக ஆகிய சில நாட்களிலேயே கட்டாயம் என்ற நிலையோடு இந்தி வந்து விட்டது!

எழுத்துக் குறைவோ, சொற்செல்வமோ, கருத்து எழுச்சியோ, கம்பீரமோ அற்ற இந்தி வந்து விட்டது! நாடோடிக் கூட்டம் பேசும் லம்பாடி இந்தி வந்து விட்டது!

சென்னை மாகாணத்தின் மற்ற மூன்று மண்டலங்களில் கட்டாயம்; தமிழ் மண்டலத்தில் மட்டும் விருப்பம் என்று எந்த நாக்குக் கூறியதோ, அந்த நாக்கே அடுத்தாற்போல் ஒரு பத்துப் பன்னிரண்டு நாட்களில் தமிழ் மண்டலத்திலும் இரண்டாவது மொழி கட்டாயம் என்று சொல்ல ஆரம்பிக்க அதனால் கட்டாய இந்தி வந்து விட்டது! உணர்ச்சிக்கும் நியாயத்திற்கும் உண்மைக்கும் வளையும் நாக்கு; ஆனால் உயர்வான அதிகாரபீடத்திலேறியிருக்கும் நாக்கு!

"இந்தியை நுழைத்து எங்கள் மானத்தை அழியாதே! செத்த வடமொழிக்குச் செலவாணியாகும் இடம் இங்கில்லை! வடமொழி தாய்; இந்தி தாயை அப்படியே உரித்து வைத்த மகள். வடமொழி பேச்சு வழக்கற்றது; இந்தி பேச்சு வழக்கிலுள்ளது. வடமொழி வரவால், அதன் ஆதிக்க ஆட்சியால், ஒரு மொழி பேசிய நாங்கள் தெலுங்கரானோம், கன்னடியரானோம், மலையாளியரானோம்; இப்போது நாங்கள் ஒருவரை யொருவர் வெவ்வேறு என்று கருதி, ஒருவரை ஒருவர் பகையாளி என்று கருதி நடந்து கொள்ளுகிறோம்! வடமொழி வரவால் "எல்லோரும் ஓர் குலம் எல்லோரும் ஓரினம்" என்று வாழ்ந்த திராவிட இனத்தார் நாலு ஜாதி ஆக்கப்பட்டு, இன்று நாலாயிரம் ஜாதியாய், அந்த நாலாயிரம் ஜாதியும் நாலாம் ஜாதியாய் அய்ந்தாம் ஜாதியாய் ஆக்கப்பட்டு, பார்ப்பனருக்குத் தேவடியாள் பிள்ளை யென்றும், வைப்பாட்டி பிள்ளை யென்றும் சாஸ்திரத்திலும், சட்டத்திலும், நடைமுறையிலும் இருந்து வரும்படியான நிலைமை ஏற்பட்டிருக்கிறது! இந்த வடமொழியின் கொடுமையால், எங்கள் முன்னோர்கள் அரக்கராக்கப்பட்டார்கள்! குரங்குகளாக்கப்பட்டார்கள்! அசுரர்களாக்கப்பட்டார்கள்! அதன்பின் சூத்திரர்களாக்கப்பட்டு தீண்டப்படாத ஜாதியார்கள் ஆக்கப்பட்டார்கள்! இன்று நாங்கள் அவர்களைக் காட்டிலும் முன்னேறி, ஒருவர் வாழ்வைக் கண்டு மற்றவர் பொறாமைப்பட்டு, ஒருவர் தாழ்வைக் கண்டு மற்றவர் மனம் திருப்திப்பட்டு, ஒருவரைவிட மற்றவர் உயர்ந்தவர் என்று காட்டிக் கொள்வதில் தீவிரமுடையவர்களாய், ஒருவரோடு ஒருவர் சேர்ந்து வாழ முடியாதவாறு சூழ் நிலையை வளர்த்து, சூத்திரர்களாகவும், தீண்டப்படாதவர்களாகவும், நாஸ்தீகர்களாகவும் ஆக்கப்பட்டிருக்கிறோம்.

இந்தி வருகையால் எங்கள் நிலைமை என்னவாகும்! இருக்கிற பேதங்கள், பொறாமைகள், தொல்லைகள் கூடுமா? குறையுமா? எங்கள் உழைப்பு, ரத்தம் சாஸ்திரத்தின் பேரால் சுரண்டப்படுகிறதே அது வளருமா? குறையுமா? இன்று நாங்கள் தேவடியாள் பிள்ளை என்று சொல்லப்படுகிற நிலைமை ஒழிந்து, எங்கள் வீடுகளிலேயே பார்ப்பனர்களுக்கென்று ஒருதனி அறை கட்டிக் கொடுத்து, அவர்கள் விரும்பிய நேரத்தில் அவர்களுக்கு அங்கு படுக்கை தயாரித்து, அவர்கள் விரும்பியபடியே எங்கள் தாயையோ, மனைவியையோ, மகளையோ அவர்களுக்குக் கூட்டிக் கொடுத்து, அவர்களுக்குப் பாதுகாப்பாய்ப் படுக்கையறையைக் காத்து நின்று, அவர்கள் சம்பந்தத்தால் நாங்கள் கிருதார்த்தர்கள் ஆனோம் என்கிற நிலைமை உண்டாகுமா? இல்லையா? இந்தி வருகையால், தமிழையே சரிவர உச்சரிக்கத் தெரியாத 100க்கு 97 பேர்களான மக்கள், இந்தியைக்கண்டு மிரண்டு பள்ளிக்கூடத்தையே வெறுக்கும்படியாகி கல்வியில் பிற்போக்காகும் நிலைமை பெருகுமா? குறையுமா? இந்தி படிப்பவர்களுக்குத்தான் உத்தியோகம் என்றால், அது பார்ப்பான் மட்டுமே உத்தியோகம் பார்க்க வேண்டும் என்பதாகச் சொல்லப்படுகிறதே தவிர, பார்ப்பனரல்லாத திராவிடர்களை உத்தியோகங்களிலிருந்து ஒட்டி ஒழித்துக்கட்டிவிட வேண்டும் என்பதே தவிர, இதற்கு வேறு என்ன கருத்து, நியாயம் சொல்லிவிட முடியும்? இந்தி வருகையால் வடநாட்டு லம்பாடிக் கூட்டம் வாணி

## பெரியார்.

### சுற்றுப்பிரயாணம்

திருச்சி நிர்வாகக் கமிட்டிக் கூட்டத்தின் தீர்மானப்படி தமிழ்நாடு தொண்டர்களைச் சந்திக்கப் பெரியார் சுற்றுப்பிரயாணத்திட்டம்.

3—7—48 செங்கம் (வ. ஆ. ஜி.)
4—7—48 கோயமுத்தூர்
7—7—48 சிவகங்கை (தெற்கு ராம்நாட்)
8—7—48 வாடிப்பட்டி (மதுரை ஜி)
9—7—48 விருதுநகர் (வடக்கு ராம்நாட்)
10—7—48 திருநெல்வேலி
11—7—48 தூத்துக்குடி
12—7—48 துறையூர் (திருச்சி)
13—7—48 தஞ்சை ஜில்லா
14—7—48 தஞ்சை ஜில்லா ஆவுடையார் கோவில்

குறிப்பு:—அந்தந்த ஜில்லா வட்டாரங்களில் உள்ள திராவிடர் கழகப் பணி ஆற்றி வரும் தொண்டர்கள், பணி ஆற்ற விரும்பும் தொண்டர்கள் (வொர்க்கர்ஸ்) யாவரும் தவறாமல் வரவேண்டுமென்று பெரியார் எதிர்பார்க்கிறார். 10-ந்தேதி திருநெல்வேலி ஜங்ஷன் சத்திரத்தில் கூட்டம் நடைபெறலாம். நாகர்கோவில் தொண்டர்கள் உள்பட அப்பாகத்திய தொண்டர்கள் வரவேண்டுமென்றும் விரும்புகிறார்.

கத்தால் செழிக்கவும், அரசாங்க லகானை இழுத்துப் பிடித்து அடக்கி ஆளவும் பயன்படுமே தவிர, இந்த நாட்டுப் பெருங்குடி மக்கள் கொள்ளையடிக்கப்படவும், சுரண்டப்படவும், அரசியலில் மீளாத அடிமைகளாக்கப்படவும் பயன்படுமே தவிர வேறு எந்தக்காரியத்துக்குப் பயன்படுவதாக இருக்கமுடியும்?''

ஆகவே இந்தியை இங்கு நுழைய விடோம்! அதன் இடுப்பை முறித்து முறியடிப்போம்! என்று எக்காளமிட்டு, வெஞ்சிறையில் வாடிய கணக்கற்ற இளஞ் சிங்கங்களையும், குழந்தைகளோடு கொடுந்துயருற்ற தாய்மார்களையும், பெல்லாரிச் சிறையில் ரத்தத்தைப் பறிகொடுத்த பெரியார் அவர்களையும், ஆரிய அகங்கார அட்டூழிய நடத்தையால் ஆவியைத் தத்தம் செய்த தாளமுத்து நடராசன்களையும், இதன் பயனாய்ப் பின்வாங்கி ஓடிய லம்பாடி இந்தியையும் ஞாபகப்படுத்திக்கொண்டு கட்டாய இந்தி வந்துவிட்டது! பல கட்சியின் பேரால், பல ஜாதியின் பேரால் பிரிந்து கிடக்கும் திராவிடப் பெருங்குடி மக்களே! என்ன செய்யப்போகிறீர்கள்?

தமிழ் நாட்டிற்குமட்டும் இஷ்ட பாடம்! மற்ற சென்னை மாகாணத்திலுள்ள பகுதிகளுக்குக் கட்டாய பாடம்! என்று முதலில் கூறியது மந்திரிசபை. பிறகு தமிழ் நாட்டிற்கும் இந்தி கட்டாயம் என்பது போலப் பேசிவிட்டது மந்திரிசபை. முதலில் சொன்னது எந்தப் புத்தியால்? இரண்டாவதாக மாற்றிச் சொல்வது எந்தப் புத்தியால்? இப்படி நாம் கேட்கவில்லை. ஏன்? இந்த மந்திரிசபையின் உள் அந்தரங்கம் நமக்குத் தெரியும். எதிர்காலத்தில் இந்தி படித்தவர்களுக்குத் தான் உத்தியோகம் என்று எப்பொழுது இந்த மந்திரிசபை சொல்லிவிட்டதோ, அப்பொழுதே இந்தியை இஷ்டபாடமென்று சொன்னால் தான் என்ன? கட்டாய பாடமென்று சொன்னால் தான் என்ன? இரண்டாலும் உண்டாக்கப் போகின்ற பயன் ஒன்றுதானே!

இந்த மந்திரிசபையின் போக்கு, ஆச்சாரியார் செய்ய முடியாத ஒரு காரியத்தை நாம் செய்து விட்டோம்என்று வடநாட்டுத்தலைவர்களுக்கு நல்ல பிள்ளைகளாகவும், நல்ல அடிமைகளாகவும் காட்டிக் கொள்வதில் ஆசைப்படுவதாக இருக்கிறதே தவிரவேறு என்ன? மந்திரிசபையின் மானத்தைக்காப்பாற்ற வேண்டும் என்று இனியும் நாம் ஆசைப்படுவோமானால் அது சிறிதும் அர்த்தமுடையகாரியமாகாது. முதல் முதல் இந்தியை இஷ்டபாடமென்று சொல்லும் போதே, எப்படியும் விரைவில் கட்டாயமாகக் கொண்டு வந்துவிட வேண்டும் என்பதுதான்இந்த மந்திரிசபையின் உள்கருத்து. இதைப் பிரதமர் ரெட்டியார் அவர்கள் கோவையில்கக்கினார்கள். "இஷ்டபாடமென்று மந்திரிசபை சொன்னால், ஏன் கட்டாயபாடமாக்கக் கூடாது என்றல்லவா ஜனங்கள் கேட்கவேண்டும், பொது ஜனங்கள் கேளாதபோனாலும் காங்கரஸின் பேரால் இன்று பிழைப்பை நடத்தும் காங்கரஸ்காரர்களாவது இப்படி ஏன் கேட்கக்கூடாது? காங்கரஸ்காரர்கள் எல்லாம் என்ன சூனாமானாவாக ஆகிவிட்டீர்களா? என்று காங்கரஸ் காரர்களைக் கேட்டாராம் பிரதமர். இது உண்மை என்றால் இவருடைய கருத்து என்ன? தமிழினத்தைக் காட்டிக் கொடுக்கும் இந்தச் செயலுக்கு வேறு எதைத் தான் எடுத்துக் காட்டாகக் கூறி விட முடியும்? செட்டியாருக்கு ரெட்டியார் இளைத்தவரல்ல! ரெட்டியாருக்குச் செட்டியார் இளைத்தவரல்ல! என்று இவர்கள் நடந்து கொள்ளுகிற போட்டா போட்டியான போக்கு, எங்களை என்றும் அனுமார்களாக, அரக்கர்களாக ஆக்கிவைப்பதாக வல்லவா இருக்கிறது என்று திராவிடர்கள் எண்ணின் அதைத்தவறு என்று எப்படிச் சொல்லிவிடமுடியும்?

வடநாட்டுப் பனியா—பார்ப்பனக்கூட்டுக் கொள்ளைக்குத் திராவிட இனத்தை நிரந்தரமாகக் காட்டிக் கொடுப்பதுதான், திராவிடர்கள் என்றுமே தலையெடுக்க முடியாதவாறு செய்வதுதான், எங்களுடைய திட்டம் என்று இந்தஇந்தி நுழைப்பினால், இந்த மந்திரிசபை காட்டிக் கொள்கிறது என எண்ணினால் அதை எப்படித் தவறு என்று சொல்லிவிட முடியும்?

காங்கரசிலுள்ள திராவிட உணர்ச்சியுடைய பல திராவிடத் தோழர்கள் உண்மையாகவே சந்தேகப்படுகிறார்கள். அவர்கள் சந்தேகத்தைப்போக்கவேண்டியதுநம்முடையகடமை. "வெள்ளையன் நுழைந்து அவன் ஆட்சி இங்கு ஏற்பட்டு அவன் மொழி இந்த நாட்டைஆளத்தொடங்கியபோது, ஆங்கிலத்தை மிலேச்ச பாஷை என்று கூறி, திராவிடர்களை ஆங்கிலங்கற்பதில் அக்கறைகாட்டச் செய்யாமல், அக்கிரகாரமே ஆங்கிலம் படிக்கவும், அதன் பயனாய் அவர்களே உத்தியோக மண்டலத்தைக் கைப்பற்றவுமான நிலைமை ஏற்பட்டுவிட்டது என்று கூறுகிறீர்கள்; அது உண்மை. இப்பொழுது நீங்கள் இந்தியை வெறுக்க வேண்டும்; கட்டாய பாடமாக்கக் கூடாது என்று கூறுவீர்களேயானால் இதனால் விளையப்போவது என்ன? பார்ப்பான்களெல்லாம் இந்தியைப் படித்து விடுவார்கள். நாமெல்லாம் இந்தியைப்படியாமலிருப்போம். அவர்களே உத்தியோக மண்டலத்தைத் திரும்பவும் கைப்பற்றி ஆட்சி புரிவார்கள். உங்கள் பேச்சைக் கேட்டால் நாமெல்லாம் வாயில் கையைவைத்துக் கொள்ள வேண்டியதுதான்.'' என்று இப்படியாகப் பல காங்கரஸ் திராவிட நண்பர்கள் எண்ணுகிறார்கள்; பேசுகிறார்கள், நம்புகிறார்கள். இவர்கள் நம்பிக்கைக்குச் சிறிதும் இடமில்லை என்று அவினாசியாரே சிற்சில வேளைகளில் கூறி விளக்குகிறார்! அதை நாம் இங்கு எடுத்துக்காட்டுகிறோம். அதை அவர் சொந்தப் புத்தியோடு சொல்லுகிறாரோ என்னவோ நாமறியோம். ஆனால் அவர் சொல்வதைச் சொல்லுகி

---

## நடக்க இருப்பவை.

திண்டுக்கல் நகர திராவிடர் கழகத் துணைத் தலைவர் தோழர் மா. தங்கவேலர் அவர்களின் தமையனார் தோழர் நல்லுச்சாமிக்கும், தோழியர் ஞானத்திற்கும் 8—8—48-ம் நாள் நகராட்சிமன்றத் தலைவர் கீ. இராமலிங்கனார் எம். ஏ. அவர்கள தலைமையில் திருந்திய திருமணம் நடைபெறும்.

துறையூர் தோழர் கிருஷ்ணசாமி அவர்களின் முதல் மகன் தோழர் பாலசுந்தரமும், தோழர் பெருமாள் அவர்களின் புதல்வி தோழியர் நீலாவதியும் 12—7—48-ம் நாள் திராவிடத் தந்தை பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் முன்னிலையில் வாழ்க்கை ஒப்பந்தம் செய்து கொள்வார்கள்.

றோம்.

"தமிழை முதல் மொழியாகச் செய்து விட்டேன். தமிழிலேயே மற்ற பாடங்களைச் சொல்லித்தர வேண்டுமென்றும் ஏற்பாடு செய்து விட்டேன். தமிழ்க் கவிக்கும் பெருமை கொடுத்திருக்கிறேன். தமிழ்க் கலைக்களஞ்சியத்திற்கும் வழி வகுத்துவிட்டேன். தமிழிலேயே ஒரு ஜில்லாவில் ஆட்சி நடைபெறச் செய்திருக்கிறேன். இன்னும் ஐந்து வருஷங்களுக்குள் தமிழ்நாடு முழுவதும் தமிழிலேயே ஆட்சி நடைபெறும்." இப்படியாகத்தானே திருவாய் மலர்ந்தருளுகிறார் அவினாசி. இதை வெத்து வேட்டு, தகரக்குழாய் என்று கருதுகிறீர்களா? என்று நாம் காங்கரஸ் திராவிடத் தோழர்களைக் கேட்கிறோம். ஐந்து வருஷத்தில் தமிழ் நாடு முழுவதும் தமிழாட்சியே நடைபெறும் என்றால், ஆந்திரம் முழுதும் ஆந்திர மொழியிலேயே ஆட்சி நடைபெறுமென்றால், கன்னட நாட்டில் கன்னட மொழியிலும், கேரள நாட்டில் கேரள மொழியிலும் ஆட்சி நடைபெறுமென்றால் அரசாங்க உத்தியோகங்களுக்காக இந்தி வேண்டும் என்பதை நீங்கள் எப்படி நம்புகிறீர்கள்? என்று கேட்கிறோம்.

ஆனால் ஐந்து வருஷத்தில் தமிழாட்சி நடைபெறும் என்று சொல்லுகிற மந்திரிசபைதான் உத்தியோகங்களுக்கு இந்திவேண்டும் என்றும் கூறுகிறது. இந்த வெட்கக்கேட்டை யாரிடம் சொல்லி அழுவது என்கிற நிலைமைக்குத்தானே நீங்கள் வரவேண்டும் என்றும் கேட்கிறோம்.

இந்த நாட்டுமக்கள் ஒருமுகமாக இந்தி கூடாது என்று சொல்லிவிட்டால், எப்படி இஷ்ட பாடமாகத்தான் இருந்துவிட முடியும்? எப்படி உத்தியோகத்திற்குத்தான் அது ஒரு தகுதியாக இருந்துவிட முடியும்? அதை இந்த நாட்டில் நுழைய இடங்கொடாததால் என்ன தீமைதான் வந்துவிட முடியும் என்றும் கேட்கிறோம்.

திராவிடத் தோழர்கள் எக்கட்சியிலிருந்தாலும் இது ஒன்றுகூட வேண்டிய நேரம்! வேற்றுமைகளை மறக்கவேண்டிய காலம்! வருகிற அழிவு, ஏற்படுகிற நாசம், எரிகிற தீ, முழங்குகிற இடி, நம்மில் ஒருசிலருக்குமட்டுமல்ல என்று, ஆபத்தை அப்படியே அறிந்து கொள்ள வேண்டிய வேளை! இந்த நேரத்திலும் நாம் ஒன்றுகூடி, நமக்கு வேண்டியதை நாமே வகுத்துக் கொள்ள முற்பட்டு, அதற்கான காரியங்களைச் செய்ய, எந்த ஒரு காரணத்தைக் கொண்டும் நாம் பின்வாங்குவோமானால், என்றும் நாம் மீளா அடிமைகளாகவே ஆவோம் என்பதை உணர்ந்து காரியமாற்ற வேண்டிய சந்தர்ப்பம். இச்சந்தர்ப்பத்தை விட்டுவிட்டால், இந்த வேளையில் அனுமார் கும்பலுக்கு இடங்கொடுத்துவிட்டால், இந்த நேரத்தில் கட்சிக் கட்டுப்பாட்டை கருதினால், இந்த வேளையில் பதவியைப் பெரிதென்று எண்ணினால், எத்தனையோ பேரரசுகளால் அழிக்க முடியாத, எத்தனையோ ஆரியர் சூழ்ச்சிகளுக்கு அழிந்தொழியாத திராவிட இனம் மானமற்ற நிலையில், மனித இனம் என்றே மதிக்கப்பட முடியாத வகையில் பூண்டற்றுப் போகும்! இன்றேல் பார்ப்பானின் அடிமைகளாக, அவன் வைப்பாட்டி பிள்ளைகளாக ஒப்புக்கொண்டு, நடைப்பிணங்களாக வாழவேண்டிய நிலைமை ஏற்படும்! இது உறுதி! உறுதி! முக்காலும் உறுதி!

பெரியார் அவர்கள் கூறுவது போல, மந்திரி சபையின் இந்த இந்தி நுழைப்பு, தமிழ் மக்களை வலுவில் வம்புச்சண்டைக்கிழுத்து அதைச்சாக்காகவைத்துக்கொண்டு திராவிடர் இயக்கத்தை ஒழித்துக் கட்டிவிடவேண்டும் என்பதாக இருக்குமேயானால், எத்தனை ரெட்டியார்களும், செட்டியார்களும் எவ்வளவு பெரிய நாமங்களைப் போட்டுக்கொண்டு விபீஷண ஆழ்வாரின் தாசானுதாசர்களாகக் கிளம்பிக் காட்டிக் கொடுக்கும் காரியத்தைச் செய்தாலும், திராவிட இனம் விபீஷணக்கும்பலுக்கு இரையாகாதென்பது உறுதி! அல்லது பெரியார் அவர்கள் கூறுவது போல திராவிட மக்களுக்கு திராவிட மந்திரிகள் மீது துவேஷத்தை ஊட்டுவதற்காகப் பார்ப்பனீயத் தந்திரத்தின் விளைவாக இருக்குமேயானால், இதை யறியாமல் மந்திரிசபை இக்காரியத்தில் ஈடுபடுமானால், இதற்கு முதற் பலி மந்திரி சபைதான் என்பதும் உறுதி!

திராவிட மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் இச்சோதனைக்காலம் பலரைப் பலியாகக் கொள்ளலாம், ஆனால் முடிவு என்ன? இறுதியில் வெற்றி நமதே! இதைக்கல்லிட்டு நாம் இன்றே கூறுவோம்! என்று முழங்கும் திராவிடக் கட்டிளங்காளைகளின் முழக்கம், காரிகையரின் பேரொலி நம் காதிற்குக் கேட்கிறது! மந்திரி சபைக்குக் காது உண்டா? அந்தக் காதிற்கு இந்தப் பேரொலி எட்டுகிறதா? என்பதைப்பற்றி நாம் எண்ணவில்லை! கேட்கும் முழக்கம் கிடுகிடுக்கும்படியாய் ஓங்கட்டும்! இருக்கும் வேற்றுமை மறைந்தொழிந்து இனப்பெயரால் இந்த நாட்டு மக்கள் ஒன்றுபட்டு, உருவத்தால் பலர் என்றாலும் உள்ளத்தால் ஒருவர் என்ற நிலை வளரட்டும்! தருக்கினால், தந்திரத்தால், சாகஸத்தால், பிற பகுதியிலுள்ளவர்கள் அல்லது பிற பகுதிக்கு அடிமைகளானவர்கள் தமிழ் மக்களுக்கு வெறுப்புறும் செயல் செய்வார்களேயானால் அத்தகையோர் விரைவாக முதுகெலும்பு முறிக்கப்பட்டு, அவர்களுடைய தருக்கும், தந்திரமும் ஒடுக்கப்படும் என்ற நிலை ஓங்கி வளரட்டும்! இது நம் எண்ணம்; நமது ஆசை.

திராவிட மக்களே! இந்தி வந்துவிட்டதா? கட்டாய இந்தி வந்துவிட்டதா? அவினாசியார் அப்படித்தான் சொல்லுகிறார்.

★

## இராசீபுரத்தில்.

இராசீபுரம் 26-6-48.

இன்று மாலை 6-30 மணிக்கு திராவிட சீர்திருத்த இளைஞர் கழகத்தின் சார்பில் தோழர் எம். திருமலைசாமி அவர்கள் தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் தோழர்களான சீதாராமன், ஆறுமுகம், நாராயணசாமி, அரங்கசாமி ஆகியோர் "மனுதர்மமும் திருக்குறளும்" என்னும் பொருள் பற்றிப் பேசினார்கள். தோழர் வரதப்பன் நன்றிகூற இரவு 10-மணிக்குக் கூட்டம் முடிந்தது.

21—7—48ம் நாள் பௌர்ணமியில்
கைலாஸ் ஹில்ஸ் ஹெர்ப் (ரிஜிஸ்ட்)
ஒரு டோஸ் உட்கொண்டால்
5-வகையான ஆஸ்த்துமாவும்
சுகமாகும்.
ஆங்கிலம் அல்லது இந்தியில் எழுதுக:
BRAHMACHARI G. DAS
Sri Sidh Brahmacharya
Sewa Ashram,
P. C. Chitrakot, U. P.

# என்ன செய்வாய்?

★

அன்புள்ள தமிழா, எனதருமைத் தோழா, அயர்வுறாது அறம் காத்து மறம் வளர்த்த தமிழா, நாகரீகத்தில் முதிய தமிழா! உனக்கு ஒரு விண்ணப்பம். அடிமையின் கரிய பயங்கர இருள் காலைப்பனிபோல் சுதந்தரக் கதிரொளியில் ஒழிந்தது. சுதந்தர ஜோதி ஞானஒளிவீசி நம் தமிழகத்தைப் புதுப்பித்தது. அறியாமை இருள் நீங்கி அறிவொளி தமிழகம் முழுதும் பரவிக் கிடக்கின்றது. உன்நாட்டார், உனதருமைத் தமிழர்களின் முகத்திலே புதிய ஒளி, அறிவொளி அலங்காரஞ் செய்கிறது.

ஒவ்வொரு தமிழ் மகனும் வறுமை வாழ்வைப் புறக்கணித்துப் புதுவாழ்வில், ஒளிபெற்ற, ஜீவனுள்ள வாழ்வில் மூழ்கித்திளைக்கிறான். தமிழகம் தரணியிலே உயர் நிலையடைய வேண்டுமென்பதற்காக ஒவ்வொரு வீரத் தமிழனும் பாடுபடுகின்றான்.

இத்தனை நாள் அன்னிய மொழிக்கு ஆசனம்தந்து, சீரிழந்து, கோலிழந்து, செம்மையிழந்து, தன் பொலிவிழந்து, அடிமைத் தளைபிணித்து வருத்த மனம் நொந்திருந்த தமிழ் அன்னை, என்றோ யாருக்கும் தெரியாமுன் தோன்றி, இன்றும் இளைமை மாறாத உன்செந்திரு, இன்று உன்னால், உன் வீரத்தால் மீண்டும் அவளைத் தமிழரசியாய், தமிழர் தம் மூச்சாய், அவர் தம் குலக் கொழுந்தாய் முடிதரிக்கச் செய்துவிட்டாய் என்று வைத்துக் கொள். (இன்னும் நீ அதைச் செய்ய முன்வர வில்லையே)

எங்கு நோக்கினும் கோலாகலம். ஒரு பால் பத்தினித்தெய்வம் கண்ணகியின் வழி வழி வந்த வீர மறவர்குல மகளிர், மற்றொரு பால் இமயத்தில் புலிக்கொடி நாட்டிய சேரன் செங்குட்டுவனின் பரம்பரையிலுதித்த தோன்றல்கள் சூழ்ந்து ஆடி, மகிழ்வோடு பாட, வெற்றி முரசு, 'தாம் தாம்' என ஒலிக்க தமிழ்த் தாயின் முடிசூட்டு விழா அழகுடன், "இனி உன்னை முடியிழக்கவிடோம்", "உன் புகழை உலகெங்கும் பரவச் செய்வோம்" எனும் வீர முழக்கோடு இனிதே நடைபெற்றது.

தமிழன்னையின்—நமது அன்புக்குப் பாத்திரமான அரசியின்—மனம் மகிழ்ச்சியால் பூரித்தது. அப்பொழுது அவள் தோன்றிய, அவள் அழகுதோன்றிய விதத்தை எதனோடு ஒப்பிடுவதென்று அங்கு கூடிய புலவர் மணிகளுக்கே புலனாகவில்லை. மிக வினிதாகவே முடி சூட்டு விழா முடிவுற்றது.

கதிரோனின் செம்பொற் கதிர்கள் மேலைக் கடலில் மூழ்கி உருத்தெரியாமல் மறைந்து விட்டது. வட்ட முழுமதி தோன்றி உலகெல்லாம் குளிர் நிழலைப் பரப்பிக் கொண்டிருந்தது.

தமிழன்னை அரண்மனையின் உப்பரிகை மீது நின்றிருந்து புறக்காட்சிகளில் மனம் பறிகொடுத்து சிந்தனையில் மூழ்கியிருந்தாள். தூரத்து மரக்கிளையில் பேடையோடு கொஞ்சிக் கொண்டிருந்த குயில் "குருக்கூ, "குருக்கூ" எனக் கூவியது அவள் காதில் விழுந்தது. உடனே அவள் திரும்பினாள். பக்கலில் நின்றிருந்தான் ஒரு வீரன்.

"குழந்தாய்"

"தாயே"

"இத்தனை நாட்கள் என்னை-உன் அன்னையை-வாட்டிய பேரிருள் கழிந்துவிட்டதல்லவா?"

"ஆமாம், உண்மைதான் தாயே"

"இத்தனை நாட்கள் என் கரங்களில் மாட்டப்பட்டிருந்த அடிமைத்தளை களைந்தெறியப்பட்டு விட்டதல்லவா?"

"பொய்மை அல்ல தேவி, நிச்சயமாகக் களையப்பட்டு விட்டன"

"இவ்வளவு நாட்களும்என்னை வாட்டிய இன்னல்கள் மறைந்து விட்டன. ஆனாலும் அதனால் ஏற்பட்ட வருத்தத்தின் சாயல் மட்டும் இன்னும் மறையவில்லை. ஆதலால்......"

"ஆதலால்.........என்ன வேண்டும் தாயே"

"ஆதலால் என்னுடைய யாழை சற்று எடுத்துவாடா குழந்தாய். அதை வாசித்தாகிலும் அந்த இன்னலின் சாயலை மறக்கப் பார்க்கிறேன்."

"ஆ......" அவன் வாயிலிருந்து


நீங்கள் அவசியம் படிக்கவேண்டும்!

## தீண்டாமை

★

"தன்மான இயக்க வீரர் வேதாசலம் அறிவுரை, அண்ணாவின் நடுக்குவாதம் உண்டுபண்ணும் அடுக்கு வாதம்........."
—நாவலர் ச. சோ. பாரதியார்.

"இன்றைய ஈ. வெ. ரா. நாளைய காந்தியடிகள்"
—கா. அப்பாத்துரை M. A., L. T.,

"பாண்டியன் வழிவந்த பறையனுக்கு உரிமைதர வடமொழி வேதங்கள் விளக்கம் தேவையில்லை"
—ம. பொ. சிவஞானம்.

●

மூவர்ண முகப்பு—உயரிய தொகுப்பு—முழு ஆர்ட் பதிப்பு.
(அறிவுப்பண்ணை வெளியீடு)

விலை ரூ. 1—8—0. வியாபாரிகளுக்குக் கமிஷன் உண்டு.

கிடைக்குமிடம்:—

நாதன் கம்பெனி லிமிடெட்,
(விற்பனை உரிமையாளர்)
கச்சேரி வீதி, ஈரோடு.

# மிஞ்சி எரியுதடா!

★

நாடுபல கண்டும் நாடோடியாய்த்திரிந்தும், நற்குணம் அற்றும் நய வஞ்சக நடிகர்கள் நாட்டின் நலனே தன் நலம் என்று பெருமை பல பேசியும், பாமரமக்களைப் படுகுழியில் வீழ்த்தியும், வீழ்த்திய மோகத்தால் நாட்டிலே நடமாடும் குள்ள நரிக் கூட்டத்திற்கோர் எச்சரிக்கை. பாடுபட்டும் உணவறியாத் திராவிடர்கள் கேடு கெட்டுப் போனதற்கோர் வழி காட்டியாய் வாழ்ந்த உங்கள் ஏகபோக வாழ்விற்கோர் பேரிடி தேவை. கேடு பல கண்டு கெடுமதியாகித் தடுமாறித்திரியும் தாழ்ந்த திராவிட மக்களுக்குச் சுயமரியாதை மருந்து தேவை. ஆரிய அந்தகார வாழ்வுக்கு, அதிகாரப் போதைக்கு, தந்திரக்குணத்தார்க்கு, பஞ்சாங்கப் பஞ்சைகளுக்கு, படுமோசப் பார்ப்பனர்களுக்கு முதலாளிக்கும்பலுக்கு இடுகாட்டிலே ஓர் இடம் தேவை.

அட! வாழ்வு சரிந்த திராவிடமே! நன்று! நன்று!! உன் எழுச்சி இன்மை! ஈரமற்ற நெஞ்சினர்கள் இழைத்திடும் சூழ்ச்சியைக் கண்டிரோ? உங்களிடத்தில் வலிமை இல்லையா? நீங்கள் கோழைகளா? வீரமற்ற வீணர்களா? கண்களிரண்டும் பார்வை ஒழிந்தனவா? அருமைத் திராவிடத்தை அழித்தொழிக்கத் தொடங்கியதை உணரவில்லையா? நீங்களென்ன அறிவில்லாத அசடுகளா? சிந்திக்கத் திறமில்லையா? நம்மை ஈன்றெடுத்ததாயகத்திற்கே பங்கம் விளையும் போது நுங்களுடைய அங்கங்களெல்லாம் என்ன தங்கமா? இன்பத் திராவிடத்தை நம் முன்னோர்கள் வீரத்துடன் காத்து வந்ததை, கடையர்களின் சேர்க்கையால் கருத்திழந்து விட்டாயோ, வீரத்தையும், இனப்பற்றையும் புதைப்பதற்கன்றோ முயல்கின்றீர். இஃதென்னே காலக் கொடுமை! அட்டகாசம்! அக்ரமம் அடாது! அடாது! இனி ஒருக்காலும் தாங்கமுடியாது.

திராவிடர்கள் தங்களுடைய உயிரைத் துரும்பென மதித்தார்களென்று அல்லவா வரலாறு வரையறுத்துக் கூறுகின்றது. மந்த மதியினரே மறந்தனீரோ வீரர்களின் வரலாற்றை! அய்யோ! துன்பத்திராவிடமே! நீ அழிந்தால் ஆரியர்க்கு நாமடிமை ஆவதன்றோ! நம்மானம் அழிவதன்றோ! இது தகுமா? நீதியா? அடிமைத் திராவிடனே! மானம் கொள்வீர்! ஆரிய நச்சை அகற்றி நல்வாழ்வு கொள்வீர்! தீயர் சேர்க்கையால் தீதுபலகண்ட கன்னித் திராவிடனே! வைதீகத்தை வகைப்படுத்தி வாழ்வு ஒழிந்த வளநாட்டானே! அழுதுரலைக் கண்ணுற்றாயோ! ஆண்மை அற்ற திராவிடனே! பார்ப்பனரின் பகட்டு வேடத்தைப் பாரீர்! அவர்களின் சூழ்ச்சிக் கொடுமையைப் பாரீர்! திராவிடக்கழகத்தைத்தீதென்று முட்ட முற்பட்டனர். கருப்புச் சட்டையைக் கண்டு கதிகலங்கி கடத்திவிட்டோம்; இனி வெற்றி பெற்றோம், மடக்கிவிட்டோம் என்று திடுக்கென்று எய்த அம்பின் கூரிய முனை, படக்கென்று ஒடிந்த வேகத்தைக்கண்டு, மண்டுபோல் இருக்கக்கண்டநேரத்திலே, ஆரிய மாயையாகிய ஈட்டியால் எய்தனர் இன்று. "விடுதலையின்" எழுச்சியைக் கண்ணுற்ற வீணர்கள் வீழ்த்திவிட்டோம் என்று வீராப்புப் பேசி வீதி ஓரத்திலே வீற்றிருக்கும் புல்லுருவிகளின் எண்ணத்திலே ஒரு பிடி மண். பெரியாரின் பேர் உழைப்பைக் கண்டு பொறாமைப்படும் ஆளவந்தாரின் அறியாமைக் குணத்திற்கோர் சவுக்கடி.

அக்ரகார ஆசாமிகளின் ஆகாத பேச்சைக் கேட்டுக் கொண்டு தாக்கிய தடிமுண்டங்களுக்கோர் சாவு மணி. சமதர்ம நல்வாழ்வு பெருக வேண்டும், சமத்துவம் தழைக்க வேண்டுமென்று வாதாடிய "விடுதலைக்கு" தடை செய்த, தகாத தற்குணம் படைத்த தீங்குடையோர்களின் வாழ்வுக்கோர் வசைச் சொல். கடவுளும் மதமும் கடையர்களின் எண்ணமென்று தீட்டிய "விடுதலையைக்" காவு கொடுத்தோமென்று கனவு காணும் கருமதி கொண்டோர்க்குப் படுகாட்டிலே படுகுழி. பாட்டாளி மக்களின் பிறப்புரிமையாகிய "திராவிட நாடு திராவிடருக்கே" என்று செங்குருதி கொட்டும் "விடுதலைக்கு" உங்களுடைய பங்கு. உங்களுடைய இழந்த உரிமைக்காகப் போரிடும் திராவிடக் கழகத்திற்கு உயிரும் உடலும். சூத்திரன் என்ற பட்டத்தை அகற்றப் பெரியார் கண்ட கருப்புச் சட்டைக்கோர் வெற்றி முரசு. வெற்றிக் காணத் துடிதுடிக்கும் சிங்கங்களே! கொட்டுங்கள் போர் முரசு! ஈரோடு வார்த்த தன்மான வெஞ்சுடர் பரவட்டும்! "பொங்கும் உணர்ச்சியெல்லாம் திராவிடத்தில் புத்துயிர் பெற்றதடா" என்று கூவுங்கள். வீழ்ந்த திராவிடத்தில் மிஞ்சி எரியுதடா தீ! என்று செயலில் காட்டுங்கள்.

"குழந்தைக் கருப்பன்"

---

சொற்கள் வெளிவரவில்லை. பெருமூச்சு வெப்பம் கலந்து வெளிவந்தது. அவனுடைய முகத்திலே கருமை படர்ந்தது. பதில் கூறமுடியாது திகைத்துவிட்டான். எதிரிலே கருநாகத்தைக் கண்டவன் போல் அப்படியே ஸ்தம்பித்து நின்றான். வியர்வை முத்து முத்தாக அரும்பிப்பின் உடல் முழுவதும் வழிய ஆரம்பித்தது.

"ஏ! அன்புள்ள தமிழ்மகனே, அவன்மட்டும் திகைத்து நிற்கவில்லை. தமிழ்நாடே திகைத்து நிற்கின்றது. தமிழன்னை தன் யாழைக் கேட்டால் என்ன சொல்வாய் தமிழ் மகனே. எத்தனை அருமையான நூல்களைபதினெட்டாம் பெருக்கில் ஆற்றில்—புனிதக் காவேரியில்!—மிதக்கவிட்டாய். எத்தனை சுவடிகளைக்கரையானுக்கு உணவாக்கினாய்.

அன்புள்ளவனே, இனியாகிலும் உன்னால் செய்ய முடியாவிட்டாலும், நம்முன்னோர் தந்த செல்வங்களை, கலைகளை, நூல்களை இழந்துவிடாதே. இதற்காக முன்னோர் பெயரால் அழுகல் மூட்டைகளைச் சுமக்காதே. இனியாகிலும் தமிழுக்கும் தமிழர்க்கும் பாடுபடு. இந்த யாழை ஒரு எடுத்துக் காட்டாகச் சொன்னேன். இன்னும் நீ இழந்தவை எத்தனையோ?

(தமிழன் யாழ் என்னும் இன்னிசைக் கருவியை இழந்து விட்டான். அதை மூலமாகக்கொண்டு எழுந்த கற்பனை இது)

---

**போன இந்தி திரும்புகிறது!**
**புலவர் மணிகளே!**
**தெரிகிறதா?**

(4ம் பக்கத் தொடர்ச்சி)

கூடிக்களித்திருக்கலாம்; என்றும் கூறி வைத்திருக்கிறார்கள். பெண்ணாசை கொண்ட மக்கள் இவ்வுலகத்தை வெறுப்பார்களா? இவ்வுலகைப்பெற விரும்புவது இயல்புதானே.

மூன்றாவதாக அவ்வுலகமே பொன்னுலகம்; நடக்கும் தரை, இருக்கும் மாளிகை, உட்காரும் நாற்காலி, படுக்கும் கட்டில் எல்லாம் பொன்; எங்கு நோக்கினும் பொன்மயம்; மண்ணைக் கண்ணால் காணவே முடியாது. என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆதலால் பொன் தேட வேண்டிய கஷ்டமே அங்கு சென்றவர்களுக்கு ஏற்படாது. பொன்னாசை கொண்ட மக்கள் இவ்வுலகை வெறுக்க முடியுமா? இவ்வுலகைப்பெற எத்தகைய தியாகமும் செய்வார்கள் என்பதில் என்ன சந்தேகம்?

நான்காவதாக அங்கு, நினைத்தவர்க்கு நினைத்தவற்றை உடனே கொடுக்கக்கூடிய அய்வகை நிதிகள் இருக்கின்றன. அவை கற்பகதரு, காமதேனு, சிந்தாமணி, சங்கநிதி, பதுமநிதி முதலியவைகள். ஆதலால் அங்கே சென்றவர்களுக்கு யாதொரு கவலையும் கிடையாது என்று சொல்லப்படுகிறது.

இந்த நான்கையும் விரும்பாத மக்கள் இல்லை; இவையே பொதுவாக எல்லா மக்களுடைய குறிக்கோளாக இருக்கும் பொழுது இவற்றை வெறுப்பவர்கள் யார்? இவை நான்கும் உள்ள ஒரு உலகம் இருக்கிறது என்றால், பேராசை பிடித்த மக்கள் ஆராய்ச்சியின்றி இதனைநம்புவதில்என்னவியப்பு!

"ஆனால் இத்தகைய உலகத்தை இப்பிறப்பில் காணமுடியாது; மறுபிறப்பில்தான் காணலாம். மறுபிறப்பிலும் அவ்வுலகத்தை அடைய வேண்டுமானால் இவ்வுலகில் புண்ணியங்களைச் செய்ய வேண்டும். புண்ணியஞ்செய்யாதார்க்கு அவ்வுலகம் கிடையாது; நாஸ்திகர்களும், சந்தேகவாதிகளும் இவ்வுலகை எட்டிக்கூடப் பார்க்க முடியாது; என்று குருமார்கள் கூறிவைத்தார்கள். மறுபிறப்பு நம்பிக்கையும் இவ்வுலகக் கற்பனைக்கு ஒரு அசையாத அஸ்திவாரமாயிற்று.

இந்தச் சொர்க்க பதவியை அடைய வேண்டும் என்று ஆசைப்படுவோர்க்குப் பல சடங்குகளைக் காட்டினார்கள். சிரார்த்தம், கருமாதி, கோதானம், பூதானம் போன்றவைகளை ஏற்படுத்தினார்கள்; தீர்த்தயாத்திரை, தலயாத்திரை, முதலியவைகளை விதித்தார்கள். தீர்த்தக்கரைகளிலும், தலங்களிலும் புரோகிதர்களுக்குத் தானதருமம் செய்யும்படி கட்டளையிட்டார்கள். இவைகளை வற்புறுத்த பல புராணங்களையும் ஸ்மிருதிகளையும் ஏற்படுத்தினார்கள்; இந்த நூல்களை பகுத்தறிவாளர் கட்டுக்கதைகள் என்று கூறினால் அதை மற்ற மக்கள் எளிதில் நம்பிவிடாதிருக்க ஒரு தந்திரமுஞ் செய்தார்கள். அத்தந்திரம் அந்நூல்கள் யாவும் கடவுள் என்பவர் கட்டளைப்படி தெய்வீகத்தன்மைவாய்ந்த முனிவர்களால் கூறப்பட்டவை என்பதே. இப்பொழுது கஷ்டப்பட்டாலும், இறந்த பின்னாவது இத்தகைய சுவர்க்கத்தைப்பெறலாம் என்ற பேராசையால் மக்களும் இவைகளை நம்பினார்கள்.

அய்யோ! பாவம்! இவ்வுலகில் ஒரு வேளைச் சோற்றுக்கு வழியின்றித் துன்பப்படும் ஏழை மக்கள் கூட்டமே இதனால் ஏமாறுகின்றனர். இந்த மறுவுலக வாழ்வில் அதிக நம்பிக்கை வைக்கின்றனர்; மெய்வருந்தி உழைத்துச் சம்பாதிக்கும் தங்கள் பொருளை வீண்விரயமாக்குகிறார்கள். வயிற்றுவலிக்காரன் எதை மருந்து என்று கொடுத்தாலும் சாப்பிடுவது இயல்புதானே. பணக்காரர்கள்—அறிவுடையவர்கள் இதனால் ஏமாறுவதில்லை; ஒருவகையில் அவர்களுக்கு இதனால் இலாபம் உண்டென்று கூடக்கூறலாம். ஏழைமக்கள் ஏழைமக்களாகவே இருக்கவழி செய்வது அவர்களுக்கு இலாபம் அல்லவா? சில மக்கள் ஏதோ கிடைத்த பொருளைக்கொண்டு இப்பொழுது சுகமாக வாழ்வோம். இறந்தபிறகு அடையும் இன்பத்தைப்பற்றி இப்பொழுது கவலைவேண்டாம். என்று சொல்லுவார்களானால் அவர்களைப் பயமுறுத்துவதற்கு நரகத்தைக் கற்பனை செய்திருக்கிறார்கள்.

பொதுவாக மனிதர்கள் எவைகளுக்குப் பயப்படுவார்களோ அவைகளையெல்லாம் நரகமாகச் சிருஷ்டித்திருக்கிறார்கள். இதைக்கொண்டே நரகம் கற்பனை என்பதை உணரலாம்.

நரகங்கள் கோடிக்கணக்காகக்கூறப்படுகின்றன. சில நரகம் வெறும் நெருப்புக் குழம்பாக இருக்குமாம். சில நரகம் முழுதும் நட்டுவாக்காலிமயமாக இருக்குமாம்; சில நரகங்களில் பாம்புகள் நிரம்பியிருக்குமாம்; சில நரகம் கொதிக்கின்ற எண்ணெய்மயமாக இருக்குமாம்; இவைகளைப் போலவே நமக்குத் தெரிந்த பொருள்களைக் கொண்டும், நாம் பயப்படக்கூடிய பொருள்களைக் கொண்டும் நரகலோகங்கள் கட்டப்பட்டுள்ளன.

மதங்களை நம்பாதவர்கள், சாஸ்திரங்களை நம்பாதவர்கள், குருமார்களை அலட்சியம் செய்கிறவர்கள், அவர்கள் சொற்களைக் கேட்காதவர்கள், குருமார்கள் கூறும் சடங்குகளைச் செய்யாதவர்கள், குருமார்களையும், சடங்குகளையும் நிந்திப்பவர்கள் ஆகிய இவர்கள் எல்லாம் நரகத்தையடைவார்கள் என்று சொல்லப்பட்டிருக்கின்றது.

பொதுவாக இந்த சொர்க்க நரகக் கோளாறுகள் புரோகிதர்களாலேயே ஏற்பட்டன என்று சொல்லிவிடலாம். ஒருவன் சொர்க்கம் பெறவேண்டுமானால், குருமார், அல்லது புரோகிதர் சொற்படி கேட்கவேண்டும். ஏனெனில் சொர்க்க வாசலின் சாவி அவர்கள் கையிலேயே இருக்கின்றது. இவர்கள் உதவியில்லாமல் சொர்க்கம் பெற முடியாது என்று பொதுவாகப் பழமையான எல்லா மதங்களிலும் கூறப்படுகின்றது. சுவர்க்கம் அடையாதவர்கள், சொர்க்கம் அடைவதற்கு வேண்டிய காரியங்களைச் செய்யாதவர்கள் நரகத்தையடைவார்கள் என்று சொல்லப்படுகிறது.

ஆகவே இவற்றை நன்றாக ஆராய்ந்தால சுவர்க்கம் என்பதும் நரகம் என்பதும் கற்பனை என்பதில் அய்யமில்லை என்று அறியலாம்; ஆசை கொண்ட மக்களை ஏமாற்றவே சொர்க்கம் கட்டப்பட்டது; பயங் கொண்ட மக்களுக்குப் பூச்சாண்டி காட்டவே நரகம் கட்டப்பட்டது; இதில் சிறிதும் சந்தேகம் இல்லை. இவ்வுண்மையை உணராத மக்களே இவற்றை நம்பி ஏமாறுகின்றனர்; வீண் சடங்குகளில் பொருளைச் செலவு செய்கின்றனர். மெய் வருந்திச் சம்பாதிக்கும் சிறிது பொருளையும் இவ்வுலக இன்பம் பெறச் செலவழிக்கின்றார் இலர்; மறுவுலக இன்பங்கருதி வீண் செலவு செய்து ஏமாறுகின்றனர்; இவ்வுலகில் தங்கள் வாழ்நாள் முழுதும் துன்புறுகின்றனர். வயிற்றுப் பிள்ளையை நம்பி மாடு மேய்க்கும் பிள்ளையைக் காலைவாரியடிப்பது போல, இறந்தபிறகு ஏதோ கிடைக்கப்போகிறது என்பதற்காக இப்பொழுது தனது சுகத்தைத் துறப்பது பைத்தியக்காரத்தனம் அல்லவா? அறிவுடையவர்கள் "மனிதன் இவ்வுலகில் பிறக்கின்றான்; இருக்கின்றான் இறக்கின்றான்" என்று சர். சி. வி. ராமன கூறியதை மறுக்க முடியாது. இதைவிட மனிதனுடைய வாழ்வைப்பற்றி வேறு ஒன்றும் சொல்ல முடியாது. ஆதலால இக்காலத்தில் தன் வாழ்வைச் செம்மைப்படுத்திக் கொள்ள முயல்வதே அறிவுடைமையாகும். சுவர்க்க நரகங்களால் ஏமாறுவது அறியாமையே. இது நமது சொந்தக்கருத்து. நீங்களும் ஆராயுங்கள்!

# மோட்சம் நரகம், முடிச்சுமாறிகள் பேச்சு!

ரோஜா முத்தையா

[3ம் பக்கத் தொடர்ச்சி]

களைக் கொண்ட படங்கள் உட்கருத்துக்கு விரோதமாகக் காணப்படுவதாலும், அவைகளைக் காட்சிப்படுத்துவதனால் சமய ஒழுக்கம் குன்றுவதாலும், தெய்வத்தை இழிவுபடுத்துவதாலும், ஹிந்துக்களைப் புண்படுத்துவதாலும், அத்தகைய படங்கள் விலக்கப்பட வேண்டும்.''

இது சைவ மகாநாட்டுத் தீர்மானங்களில் ஒன்று.

புராணக் கதைகள் என்பன "ஈசாப் கதைகளைப்" போன்ற வேடிக்கையான கட்டுக் கதைகள் என்ற அறிவு வரவேண்டிய நிலையிலுள்ள சைவ அறிஞர்கள், அவைகளில் ஏதோ "உட்கருத்துக்கள்" இருப்பதாகக் கூறுவது விரோதமாகவேயிருக்கிறது! சினிமாக்களில் இவைகள் காட்டப்படுவதனால் "சமய ஒழுக்கம் குன்று" கிறதாம்! அப்படியானால் சினிமாக்கள் வருவதற்கு முன்பு சமய ஒழுக்கங்கள் ஒழுங்காக இருந்தனவா? நெஞ்சில் கைவைத்துக் கூறமுடியுமா? இவைகள் "தெய்வத்தை இழிவுபடுத்துகின்றனவாம்! எந்தத் தெய்வத்தையோ? பிள்ளைக்கறி கேட்ட அந்தத் தயாபரனையா? அல்லது தாயைப் புணர்ந்தவனுக்குக் கைலாச பதவி அளித்த அந்தப் பரம்பொருளையா?

தெய்வத்தை இழிவு படுத்துபவர்களைத் தண்டிப்பதற்கு இவர்கள் என் எதிராஜுகளாகப் புறப்பட வேண்டும்? அவருக்குத் தெரியாதா, தம்மைக் காத்துக் கொள்வதற்கு? அவர் சைவர்களை மட்டுந்தானா உண்டாக்கினார்? மற்ற மதத்தவர்களை உண்டாக்கவில்லையா? கடவுளைப் பற்றிக் கவலைப்படாதே, என்று கூறும் பௌத்தர்களை உண்டாக்கவில்லையா? கடவுளைவிட மனிதர்களே முக்கியமானவர்கள் என்ற புரட்சிக்காரர்களை உண்டாக்கவில்லையா?

இனிக்கடைசியாக,'ஹிந்துக்களைப் புண்படுத்துவதாகவும் முறையிடுகிறது, இந்தத் தீர்மானம். சிவமதம் என்பதும் ஹிந்து மதத்தின் ஒரு பிரிவுதான்; அதாவது ஆரியத்தின் ஒரு கிளைதான், என்பதை யார் மறுக்க முடியும்? சைவத்திற்கும் ஹிந்து மதத்திற்கும் எவ்விதத் தொடர்புமில்லையெனறால், சைவர்கள் என் "ஹிந்து மதம்" என்ற சொற்களையும் சேர்க்க வேண்டும்?

சைவமெய்யன்பர்களை நாம் கேட்டுக் கொள்வது ஒன்று. கடவுளுக்கு நேரிட்டிருக்கும் ஆபத்தைப் பற்றி நீங்கள் சதாகவலைப்பட்டு உடலைத் துரும்பாக்கிக் கொள்ளாதீர்கள்! உங்கள் ஊர்ச்சேரியிலுள்ள சிறுவன் வாய் ஏன் பசுமாட்டுப் பாலைச் சுவைத்ததில்லை? அவன் தலை ஏன் நல்லெண்ணையைக் கண்டதில்லை? அவன் உடல் என் நல்ல துணியைக் கண்டதில்லை? இவைகளைப்பற்றி எண்ணுங்கள். மீண்டும் மீண்டும் எண்ணுங்கள். எண்ணியபின் வழிதேடுங்கள்.

## "கடவுளைக் காப்பாற்ற சைவர் படையெடுப்பு"!

## (2)

"அமைதி நிலவும் இந்த மாகாணத்தில் வகுப்புவாத ஸ்தாபனங்கள் அமைதியைக் குலைப்பதற்கு இடமளித்தலாகாது" என்றும், இத்தகைய ஸ்தாபனங்களின் நடவடிக்கைகளை ஆட்சியாளர் கவனித்து வருகின்றனர் என்றும், "தகுந்த சமயத்தில் அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்படும்" என்றும் ஒரு செய்தி வெளிவந்திருக்கிறது.

இம்மாகாணத்திலுள்ள வகுப்புவாத ஸ்தாபனங்கள் எவை என்பது நமக்குப் புலனாகவில்லை. பல இடங்களில் ஜாதி மகாநாடு கூடுகிறார்களே அவைகளைத்தான் குறிப்பிடுகிறார்களோ என்றால், மந்திரிகளே அம் மகாநாடுகளில் கலந்து கொள்வதனால் அவைகளைக் குறிப்பிடவில்லை என்று தெரிகிறது. கிருஸ்தவர் மாநாடு, ஜைனர் மாநாடு, சைவர் மாநாடு, என்ற பெயர்களால் மத உணர்ச்சியை அடிப்படையாக வைத்து மாநாடு நடத்துகிறார்களே, அவைகளாக இருக்கலாமோ? அல்லது, பிராமண சேவாசங்கம் என்ற இனப்பெயரால் கிளர்ச்சி செய்கிறார்களே, அந்த ஸ்தாபனத்தைக் குறிப்பிடுகிறார்களா?

அல்லது, முஸ்லிம் லீக் என்ற ஒரு சிறுபான்மையோர் சங்கத்தைக் குறிப்பிடுகிறார்களா? அல்லது எல்லா வகுப்பார்களும் அய்க்கியப்பட வேண்டும் என்ற அடிப்படையைக்கொண்ட திராவிடர் கழகத்தைக் குறிப்பிடுகிறார்களா?

"வகுப்பு" என்ற சொல்லை எந்தப் பொருளில் உபயோகப்படுத்தியிருக்கின்றனரோ, தெரியவில்லை. "வகுப்பு" என்றால் 'மதம்' அல்ல; ஆகையால் முஸ்லிம் லீக் ஸ்தாபனமாகவோ, சைவசித்தாந்த சபையாகவோ, ஹிந்துமகாசபையாகவோ, இருக்க முடியாது. வகுப்பு என்றால் ஜாதி என்று பொருள். ஜாதியை விட்டவர்களும், அதை ஒழிக்கவேண்டும் என்று உறுதிகொண்டவர்களும் அடங்கிய ஸ்தாபனமே திராவிடர் கழகம். ஆகையால் திராவிடர் கழகமாக இருக்கவும் முடியாது.

எந்த வகுப்புவாத ஸ்தாபனமும் இந்த மாகாண அமைதியைக்குலைக்க முடியாது. அமைதியைக் குலைக்கக் கூடிய ஏதாவது ஒன்று இங்கு இருக்குமேயானால் அது இங்குள்ள ஜாதி வேற்றுமைதான். கிராமங்களில் ஜாதி அகம்பாவம் எவ்வளவு தலைவிரித்தாடுகிறது என்பதை அறியவேண்டுமானால் நமக்கு நாள் தோறும் வந்துகொண்டிருக்கும் கடிதங்களைப் பார்த்தால் போதும்.

தாழ்த்தப்பட்ட மக்கள் மேல்ஜாதிக்காரர்கள் என்று கூறப்படுபவர்களால் அடிக்கப்பட்டும், சூடு போடப்பட்டும், அபராதம் விதிக்கப்பட்டும், குடிசைகள் கொளுத்தப்பட்டும், சகிக்க முடியாத தொல்லைகளுக்குள்ளாகி வருகின்றனர். "கோயில் நுழைவு" "தீண்டாமை ஒழிப்பு" ஆகிய காங்கிரஸ் திட்டங்கள் கிராமங்களில் செல்லாக் காசுகளாயிருக்கின்றன. ஜாதி வெறி மிதமிஞ்சிப்போய் விட்டது.

பார்ப்பனீய மதமாகிய ஹிந்து மதத்திலிருந்துகொண்டு இவ்வளவு தொல்லைகளுக்கு ஆளாவதை விட வேறு மதங்களுக்காவது ஓடிவிடலாம் என்ற நிலையிலிருக்கின்றனர், கிராமாந்திர மக்கள்.

ஆட்சியாளரோ வகுப்புக்களை அதாவது ஜாதிகளை, ஒழிப்பதில் கவனஞ் செலுத்தாமல், அவைகளை வளர்ப்பதிலேயே கருத்தைச் செலுத்தி வருகின்றனர்.

'வகுப்புவாதஸ்தாபனம்' என்றுஆட்சியாளர் குறிப்பிடுவது, எந்த ஸ்தாபனமாயிருந்தாலும், வகுப்புக்கள் அத்தனையும் அழியாத வரையில் வகுப்புவாத ஸ்தாபனங்கள் இருந்தேதான் தீரும்; அவைகளை அடக்கிவிடுவதோ, அழிப்பதோ முடியக்கூடிய காரியமல்ல. இன்றைய ஆட்சியாளரைத் தேர்ந்தெடுத் தனுப்பிய காங்கரஸ் ஸ்தாபனத்திற்குள்ளாகவே வகுப்புவாதம் வளர்ந்து செழித்துக் கொண்டிருக்கிறதே! மத்திய மந்திரி சபையில் தென்னாட்டு ஆதித்திராவிடர் ஒருவருக்கு மந்திரிப்பதவி கொடுக்கவேண்டும் என்று நேருவுக்குத் தந்தியடித்த தோழர்கள் சிவஷண்முகமும் முனிசாமிப் பிள்ளையும் வகுப்புவாதிகளா? தேசீயவாதிகளா? சென்னை மந்திரி சபையில் வன்னியருக்கு இடம்வேண்டும் என்று கிளர்ச்சி செய்துவரும் அஞ்சலையம்மாள் கோஷ்டியார் வகுப்பு வாதிகளா? தேசபக்தர்களா? ஆச்சாரியார் போன்ற ஆரியக் கும்பலுக்கு இனி மாகாணக் காங்கரஸில் இடமில்லை என்று தூக்கியடித்த காமராஜர் கோஷ்டியார் தேசபக்தர்களா? வகுப்புவாதிகளா?

"வகுப்புவாத ஸ்தாபனங்கள் மீது எடுக்கப்படும் தக்க சமயத்தில் நடவடிக்கை" என்று கூறுவதன் மூலம் ஆட்சியாளர் திராவிடர் கழகத்தை மிரட்டுகிறார்களோ என்று சிலர் கருதலாம். அந்தமாதிரி எண்ணம் ஆட்சியாளருக்கு இருக்காது என்றே நாம் நினைக்கிறோம். திராவிட இன உணர்ச்சி திராவிடர் கழகத்தில் மட்டுமில்லை; காங்கரஸ் ஸ்தாபனத்திற்குள்ளாகவே கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருக்கிறது. இல்லாவிட்டால் ஓமந்தூரார் இருக்கும் இடத்தில் ஒரு

வைத்தியநாத அய்யரும், அவினாசியார் இருக்குமிடத்தில் ஒரு வரதாச்சாரியாரும் அல்லவா இருப்பார்கள்?

அதுமட்டுமல்ல. திராவிடர் கழகம், கேவலம் ஒரு வகுப்பு ஸ்தாபனம் அல்ல. இன எழுச்சிப்படை. அடுத்தபடி இந்நாட்டை ஆளக்கூடிய அமைப்பு. 5-கோடி மக்களின் பிரதிநிதி ஸ்தாபனம்.

எனவே, ஆட்சியாளர் திராவிட இனத்தை மிரட்டுகிறார்கள் என்று நாம் கருதவில்லை. ஆனால், தகுந்த நடவடிக்கை எடுக்கக்கூடிய அளவுக்கு வேறு எந்த ஸ்தாபனம் இம்மாகாணத்தில் அவ்வளவு வளர்ச்சி பெற்றிருக்கிறது என்பதும் நமக்கு விளங்கவில்லை. ஒருக்கால் திராவிடக் கழகத்தின் மீதே நடவடிக்கை எடுப்பதாக முடிவு செய்திருந்தாலும் இருக்கலாம். ஓமந்தூரார் ஆட்சியையும், திராவிட இனத்தையும் இன்னும் மும்முரமாக மோதவிட்டு, ஆச்சாரியாரை அழைத்துவர வேண்டும் என்று அக்கிரகாரம் படாதபாடு படுகிறது என்பது நமக்குத் தெரியும். அந்த ஆரிய முயற்சியில் ஆட்சியாளர் ஏமாந்து போவார்களேயானால், அவர்களது ‘‘நடவடிக்கைகளை’’ திராவிடர்கழகம் வரவேற்றே தீரும். ஆனால் அதன் விளைவு எப்படி இருக்கும் என்பதை இப்போது எப்படிக் கூறமுடியும்? கழகத்தின் அழிவாக இருக்குமா? மந்திரி சபையின் அழிவாக இருக்குமா? அல்லது இரண்டினுடையவும் அழிவாக முடியுமா? இப்போது கூறமுடியாது.

‘‘வகுப்புவாத ஸ்தாபனங்கள்’’

---

[2ம் பக்கத் தொடர்ச்சி]

யே ஈன்ஸ்டன், நியூடன், பாஸ்சர், மார்க்ஸ், லெனின், பெரியார், அண்ணாதுரை போன்ற பேரறிஞர்கள் சிலசில சமயங்களிலே தோன்றுவதும் உண்மைதான். அவர்களுக்கும் நமக்கும் உள்ள வேற்றுமை மலைகளுக்கும் குன்றுகளுக்குமுள்ள வேற்றுமையே தவிர, பள்ளத்தாக்குகளுக்கும் மலைகளுக்குமுள்ள வேற்றுமையல்ல. மேலும் அறிஞர்களின் எண்ணிக்கை இவ்வளவு மிக மிகச் சிறியதாக இருப்பதற்குக் காரணம் தனிவுடைமை முதலாளித்துவப் பொருளாதாரமேயாகும். ‘இதுவரை தோன்றிய உலகப்பேரறிஞர்களில் பெரும்பாலோர் செல்வக்குடிகளிலோ, மத்தியதரக்குடிகளிலோ தோன்றியவரே யன்றி வறுமைக் குடிகளில் தோன்றியவரல்லர்; என்கிறார் இரஷ்யநாட்டுடிராட்ஸ்கி பெருமகனார்.

புலவன் தாமஸ்கிரே புகல்வது போல் வாய்ப்பும், வசதியும் இல்லாததால் தங்கள் திறமை உலகுக்கு வெளிப்படாமலே வாழ்ந்த எத்தனை கலீலியோக்கள், நியூடன்கள், ஈன்ஸ்டன்கள், கார்ல் மார்க்ஸ்கள், கரிகாற்சோழர்கள், இளவெயினிகள், இளங்கோவடிகள்மார், நெப்போலியன்கள், நெடுஞ்செழியன்கள், டிராட்ஸ்கிகள் கிராமப்புறக் கல்லறைகளில் படுத்துறங்குகின்றனரோ! எனவே பொருளாதாரத்தைப்பொதுவுடைமை அடிப்படையில் மாற்றியமைத்தால், மக்களெல்லோரும் கற்பதற்கு வாய்ப்பு ஏற்பட, அதனால் பேரறிஞர்களின் எண்ணிக்கை மிக மிக அதிகமாகுமல்லவா? மேலும் மருத்துவ உதவியினாலும், மனோதத்துவ உதவியினாலும் அறிஞர்களையே தாய்மார்கள் ஈனுமாறு செய்ய இயலும் என்று பல அறிஞர்கள் கூறுகின்றனர். எனவே சாதாரணமனிதன், பேரறிஞன் என்ற பெரும் பேதம் இன்றைய சூழ் நிலையில் இருக்கிறதேயன்றி, அப்பேதத்தைப் பொதுவுடைமைத் திட்டத்தாலும், மருத்துவ, மனோதத்துவ முறைகளாலும் மிக மிகக் குறைக்கமுடியும். அப்படிபேதம் குறைவதால் மக்களினத்தில் பெரும்பாலோர் பேரறிஞர்களாகவே திகழ்வர். எனவே சாதாரணமனிதன், பேரறிஞன் என்ற பேதத்தைப் பெருமளவுக்குக் குறைக்கக்கூடிய மார்க்கமிருந்தும் அதனைச் செய்யாது சாதாரணமனிதனுக்குப் பரீட்சைவேண்டும் என்று கூறுவது சரியா?

அறிவு தேடும் இயல்பினது மனிதனின் மூளை என்பது சிறுகுழந்தைகளைக் கவனித்தால் கூடத் தெரியவரும். இதை எடுப்பதும், அதை எடுப்பதும், நெருப்பில் கைவைத்துப் பார்ப்பதும், பூச்சியைப் பிடிப்பதுமாக அறிந்து கொள்ள, தெரிந்துகொள்ள அவாக்கொண்டுள்ளனவாக வன்றோ இருக்கின்றன? மூன்றாவது, நான்காவது படிக்கும் பள்ளிச்சிறார்களைக் கவனித்தால் இன்னும் நன்றாக விளங்கும் மனிதனுடைய அறிவுதேடும் இயற்கை. ‘ஏம்பா, சந்திரன் ஒரு நாளைக்கு முழுசா இருக்கிறான்; அப்புறம் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைகிறான்? அப்புறம் அமாவாசைபண்ணிக்கு வார்தேஇல்லை?; என்றும், கடவுளிருக்கிறாரே, அவர் எப்படி இருப்பாரு? நம்பளெப் போலத்தானே இருப்பாரு? அவர் இருக்கிறாராமே வைகுண்டம், அது [illegible]க்கு அப்பாலையாப்பா இருக்குது? என்றும், ‘ஏம்ப்பா, ரெண்டு மணி வெயில்லே ஏரிலெ எல்லாம் நட்சத்திரங்கள் மின்றாப்போல மின்னுதே, என்றும், பலப்பலவிதமான கேள்விகளைத் தம்தந்தையிடம் கேட்டுத் தெரிந்துகொள்ள விழைகிறான், விழைகிறாளன்றோ ஒவ்வொரு சிறுவனும், சிறுமியும்? இதை யாரும் மறுக்காரென்றே எண்ணுகிறேன். எனவே மாதா உதரம் விட்டு இப்பவனியில் மக்கள் தோன்றுவதிலிருந்தே அறிவைப் பின்தொடரும் வேட்கை உடலொடு வளர்ந்தே வருகிறது என்பது வெண்மையில் கருமைபோல் தெற்றெனத் தெரிகிறதன்றோ?

காலைச் சிற்றுணவு முடித்து, ஒருபுத்தம் புதிய அறிவுக் கொத்தாகிய புத்தகத்தை எடுத்துப் படிக்க ஆரம்பிப்போம். மணி பன்னிரண்டாகும். ‘வாடா சாப்பிடுவதற்கு’ என்று அன்னை அழைப்பாள். ‘இதோ வந்துவிட்டேன்’ என்று சொல்லிவிட்டுச், சிறிது படித்துவிட்டுச் செல்வோம் என்று மேலும் படிக்க ஆரம்பிப்போம். மணி ஒன்றாகும். ‘இன்னும் என்னடா, சாப்பிட்டுப் போய் படிடா’ என்று மறுபடியும் அன்னை அழைப்பாள். ‘இதோ வந்துவிட்டேன்’ என்று மறுபடியும் படிக்கவாரம்பிப்போம். மணி இரண்டாகும், மூன்றாகும். பசியும் எடுக்கும்தான். ஆனால் அப்புத்தகத்திலுள்ள அறிவுத் தொகுதி உணவினைக்கூட மறக்கச்செய்கிறது. பிறகு என்ன செய்வது, உண்ண வேண்டுமே என்று கிடுகிடென்று உண்டுவிட்டுப் பிறகும் படிக்கஆரம்பிப்போம். இந்த அநுபவத்தைப் படித்தவர்களில் பெரும்பாலோர் அநுபவத்தில் அறிந்தே இருப்பர். இதிலிருந்து தெரிவது யாது? அறிவின் மீதுள்ள காதல் உணவைக்கூட மறக்கச் செய்கிறது என்பதல்லவா?

ஏன் இவ்வளவு எடுத்துக் காட்டுகளைக் கையாண்டேன் என்றால் அறிவுத்தாகமே, கல்விப் பசியே மனிதனாக இருக்கிறான் என்பதை நிரூபிப்பதற்காகவேதான். எனவே பரீட்சையில்லாது படிக்கமாட்டான், அறிவு வளராது என்று கூறுவது தவறானது, பொருளற்றது என்பது பெறப்படுகின்றது. ஆதலின் அறிவுபெறப் பரீட்சை அவசியமில்லைதானே?

ஓ. எம். சுப்பிரமணியன்

அப்படியெனில், படித்ததற்கு என்னதான் அத்தாட்சி? ‘இன்னான் இன்ன பள்ளிக்கூடத்தில் பத்து வருடங்கள் கல்வி பயின்றான்’ என்று ஒரு தகுதிதாள் கொடுக்கட்டும் அரசாங்கம்; அது போதும். அங்ஙனமே, ‘இன்னான் இன்ன பல்கலைக் கழகத்தில் 4 வருடங்கள் B. Sc வகுப்பில் கல்வி பயின்றான்; இன்னான் 4 வருடங்கள் B. A. வகுப்பில் கல்வி பயின்றான்’, என்ற முறையிலே பல்கலைக் கழகத்தார் கல்லூரி மாணவர்களுக்குத் தகுதித்தாள்கள் கொடுக்கட்டும், அது போதும். S. S. L. C., B. A., B. Sc., M. A., முதலான கல்வி முறைகளெல்லாம் இருக்க வேண்டுமா, கூடாதா என்று ஆராய்ச்சி செய்யப்புகுந்தால், மிக மிக விரியுமாதலின் அதைப்பற்றி நாம் இங்கு சிந்திக்க வேண்டாம்.

பரீட்சை முடிவினால் விளையும் கேட்டை இக்கட்டுரையின் துவக்கத்தில் கண்டோம். பரீட்சையின் முடிவுதான் அத்தகைய கோரமெனில், பரீட்சை நடக்க ஒரு மாதம் இருக்கும் போது மாணவ மாணவிகள் படும்பாட்டைத்தான் ஏட்டிலே எழுத முடியுமா? அவர்களது அந்த ஒரு மாத மனோநிலை எப்படிப்பட்டது தெரியுமா? அல்லல், அலைச்சல், அச்சம், ஏக்கம், இன்னும் பலப்பல தீயஎண்ண அலைகள் கொந்தளிக்கும் மனத்தினராக இருப்பர். அச்சமும், வருத்தமும் வரும்போதெல்லாம் உயிருக்கு ஊறுபயக்கும் ஒருவித நஞ்சு குருதியிலே கக்கப்படுகிறது என்று உடல் நூல் வல்லாரும், மன நூல் வல்லாரும் கூறுகின்றனர். அப்படியிருக்க, ‘பரீட்சை வருகிறதே’ என்ற அச்சமும், ‘அதற்கென்ன செய்வோம்’, என்ற ஏக்கமும் மாணவ மாணவிகளின் வாழ்நாளைக் குறைத்துத்தானே விடுகின்றன. உயிருக்கு ஆக்கந் தேடக் கல்வியா? உயிருக்கு ஊறு தேடக் கல்வியா? நீங்களே சிந்தித்துக் கூறுங்கள். பரீட்சை நடந்தேறியதும் அதன் முடிவு என்ன ஆகுமோ என்ற ஏக்கம் வேறு. அந்த முடிவும் தெரிந்துவிடும்போது என்னென்ன சோக நிகழ்ச்சிகள் நிகழும் என்பதை முன்பே விளக்கி விட்டோம். கல்வி கற்கப்போகும் மகனுக்கு இவ்வளவு கவலையா? பல்கலைகளைப் பகுத்துணரச் செல்பவனுக்கு இவ்வளவு பரிதவிப்பா? தொல்லுலகின் பல்லியலைத்துய்த்துணரச் செல்பவனுக்கு இவ்வளவு தொல்லையா? அறிவு பெறச் செல்பவனுக்கு இவ்வளவு அல்லலா! அறிவுவளர்ச்சி என்பது துன்பத்தின் குறைவு என்பதாகும். அறிவு வளர வளரத் துன்பம் தேய்ந்து கொண்டே வரும். அறிவிலாது கல்லளையில் வாழ்ந்த காட்டுமிராண்டி, கால்வயிற்று இரைச்சிக்கு ஓடி ஓடி வேட்டையாடி ஓய்ந்தான்; சில பலவேளைகளில் நச்சரவுகளாலும், கொடிய விலங்குகளாலும் கொல்லப்பட்டிறந்தான். அவனது அறிவு சிறிது சிறிதாக வளர்ந்தது. அன்றாட இரைச்சிக்கு அலைந்த நிலைமாறி, நிலந்திருத்திப் பயிரிட்டு ஓராண்டிற்கு வேண்டிய உணவைச் சேகரித்து வைத்து அலைச்சலிலாது உண்டு இன்போடு வாழ்ந்தான். ஓடி ஓடி வேட்டையாடிக் காலோய்ந்த காட்டுமிராண்டியின் அறிவு சிறிது வளரவே மாட்டு வண்டி செய்தான். மேலும் மேலும் அறிவு முன்னேறவே, மாட்டு வண்டி, மோட்டார் வண்டி, ரெயில் வண்டி, ஏரோப்ளேன்களாக மாறியது. ‘பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதமெனும்’ மூதுரைப்படி, தொல்லுலகிற்கு அறிவின் வளர்ச்சியால் விளைந்த பல்லின்பங்களில் ஒன்றிரண்டை மேலே கூறினேன்.

எனவே, துன்பத்தை நீக்கி இன்பம் அடைய ஏதுவான கல்வியைக் கற்பிக்கும் திட்டம் இன்பம் தரத்தக்கதாக அல்லவா இருக்கவேண்டும்? இன்றையக் கல்வித் திட்டம் பரீட்சை என்ற நச்சரவைக் கொண்டிருத்தலால் பெரும் தொல்லையாக—துன்பமாகவல்லவா இருக்கின்றது. எனவே பரீட்சை முறை ஒழிக்கப்படவேண்டும், நாளை நாம் நமது சமுதாயத்திற்குத் தீட்டப்போகும் கல்வித் திட்டத்திலே.

“வாலறிவன்”

படித்து விட்டீர்களா?

## இயற்கை வழி—ஆத்மீக வழி
## அல்லது
## இரண்டு வழிகள்.

அறிவியக்க உலகில் முதல் ஸ்தானம் பெற்ற தோழர் கர்னல் இங்கர்சாலே இந்தப்பகுத்தறிவுக் களஞ்சியத்தின் ஆசிரியர்.

மூடபக்தி, குருட்டு நம்பிக்கை, பழக்கவழக்கக் கட்டுப்பாடு ஆகியவைகள், ஒளி தோன்ற இருட்டு அகல்வது போல் இந்த ஜீவசக்தி வாய்ந்த பகுத்தறிவுக்களஞ்சியத்தின் முன் அகன்று விடும் என்று அறிஞர்களின் அரும்புகழ் பெற்ற அறிவியல் பகுதி.

விலை நான்கணா.

★

## பெண் ஏன் அடிமையானாள்?

கற்பு, வள்ளுவரும் கற்பும், காதல், கல்யாண விடுதலை, மறுமணம் தவறல்ல, விபசாரம், விதவைகள் நிலைமை, சொத்துரிமை, கர்ப்பத்தடை, பெண்கள் விடுதலைக்கு ஆண்மை அழிய வேண்டும். என்ற பத்துத் தலைப்புக்களில் பெரியாரவர்கள் எழுதியவை.

விலை அணா எட்டு.

வியாபாரிகளுக்குக் கமிஷன் உண்டு.

கிடைக்குமிடம்:—

நாதன் கம்பெனி லிமிடெட், ஈரோடு.

Edited, Printed and Published by N. Karivaradaswamy at the Tamilian Press 42, Cutchery street, ERODE